Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-21 | 07-10-2004 | வியாழக்கிழமை | ஓசை -232



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10476) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# புலிகள் மீதான இந். அரசின் அதிருப்தியை தீவிரமாக்க ஜெயலலிதா முயற்சி!

## தமிழக முதல்வரின் அவதூறான குற்றச்சாட்டை அம்பலப்படுத்துகிறார் இராமேஸ்வர மீ.ச.தலைவர்

(லண்டன்)

**விடுதலைப்புலிகள் மீதான இந்திய மத்திய அரசின் அதிருப்தியைத் தீவிரமாக்கும் வகையில், இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசித்தால் கொல்லப்படுவீர்கள் எனப் புலிகள் தமிழக மீனவரை மிரட்டியதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ள குற்றச்சாட்டு உண்மைக்கு மாறானதென பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் இராமேஸ்வர மீனவசங்கத் தலைவர் அம்பலப்படுத்தியுள்ளார்.**

இது குறித்துத் தெரியவருவதாவது; கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை [illegible] சிறிலங்காக் கடற்படையினால் தமிழக மீனவர்கள் பலர் கைதுசெய்யப்பட்ட அதேவேளை விடுவிக்கப்பட்ட படகு ஒன்றில் இருந்தவர்களிடம் சிறிலங்கா கடற்படை கொடுத்த கடிதத்தை அடுத்து ஜெயலலிதா இந்தியப் பிரதமருக்கு உண்மைக்கு மாறான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இக்கடிதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்பிரிவினர் செயற்படுவதே தமிழக மீனவர்கள் இலங்கையில் கைதுசெய்யப்படக் காரணம் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்களின் ஐந்து படகுகளும், அதில் இருந்த இருபது மீனவர்களும் கடந்த நான்காம் திகதி தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சமயம் (14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் மு.கா மாநாட்டை நடத்தி எம் அமைதி வாழ்வைக்குலைக்கவேண்டாம்

–மு. கா. தலைமையிடம் யாழ். மீளக் குடியமர்ந்த முஸ்லிம்கள் கோரல்

யாழ்.குடாநாட்டில் தேவையற்ற மாநாட்டை நடத்தி எங்கள் அமைதியான வாழ்வைக் குலைக்கவேண்டாம் என முஸ்லிம் காங்கிரசைக் கோரி மீளக்குடியமர்ந்த யாழ்.முஸ்லிம்களால் துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது. நேற்று யாழ். இல் விநியோகிக்கப்பட்ட பிரசுரத்தில் தெரிவிக்க ப்பட்டுள்ளதாவது;

தவிர்க்க முடியாத இடம்பெயர்வு வாழ்வில் நாங்கள் சந்தித்த அவலங்கள் கொஞ்சமல்ல. அகதிகளாக.., அநாதைகளாக அல்லற்பட்ட நாங்கள் அண்மையில் தான் ஊருக்குத் திரும்பி ஓரளவு நிம்மதியாக வாழத் தொடங்கியிருக்கின்றோம்.

வீடுவாசல்களை மீளப் புனரமைத்தும், தொழில்களைத் தொடங்கியும் தமிழ்ச் சகோதரர்களோடு ஒற்றுமையாக வாழும் இந்த வேளையில் ஒக்டோபர் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ், இது போன்ற மாநாடுகளை எங்கள் மத்தியில் நடத்தி, எங்களின் இன்றைய அமைதி வாழ்வினைக் குலைக்க வேண்டாமென மிகவும் விநயமாக வேண்டுகின்றோம். (14 ஆம் பக்கம் பார்க்க)

– புலிகளால் கொல்லப்படுவீர்கள் என தமிழக மீனவரிடம் –

## சிறிலங்கா கடற்படை விநியோகித்த பிரசுரத்திற்கு சந்திரசேகரன் கண்டனம்

இந்திய மீனவர்களை கைது செய்த சிறிலங்கா கடற்படை, இந்திய மீனவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சிக்கினால் கொல்லப்படுவார்களென துண்டுப்பிரசுரம் விநியோகித்திருப்பதை தான் வன்மையாக கண்டிப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித் துள்ளார்.

கடந்த ஞாயிறு இரவு மன்னார் தெற்கு பேசாலைக் கடற்பரப்பில் தொழிலுக்காக வந்த இந்திய மீனவர்களை சிறிலங்கா கடற்படை கைது செய்த போதே மேற்படி துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப் பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கு சிறிலங்கா அரசும் அதன் ஆயுதப் படைத்தரப்பும் சேர்ந்து செய்கின்ற பாரிய சதி முயற்சியாகும். ஒரு பக்கம் சர்வதேச நாடுகளுக்கு தம்மை சமாதான விரும்பிகளாக காட்டிக் கொள்கின்ற சிறிலங்கா அரசு மறுபக்கம் எல்லா விதத்திலும் தமிழீழ (14 ஆம் பக்கம் பார்க்க)

- வவுணதீவில் புலிகள், இராணுவம் சந்திப்பு -

## அரசியல் பணியின்போது படையினரின் இடையூறு குறித்து புலிகள் எடுத்துரை!

இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்படும் இடையூறுகள் தொடர்பாக நேற்றைய சந்திப்பில் படைத்தரப்பிடம் எடுத்துக்கூறியதாகவும், அதைத்தாம் கவனத்தில்கொள்வதாகப் படைத்தரப்பினர் உறுதியளித்ததாகவும் மட்டு-அம்பாறை மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் பா.தயாமோகன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இராணுவ சூனியப்பிரதேசமாகிய வவுணதீவு (14 ஆம் பக்கம் பார்க்க)




## திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை நாளை பூரண கதவடைப்புக்கு அழைப்பு

திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு, நாளை திருகோணமலையில் பூரண கதவடைப்புச் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

'அநீதிகளை தட்டிக்கேட்போம், அகில அளவில் நீதிகேட்போம்' என்ற தலைப்பில் பேரவை நேற்று வெளியிட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் தெரிவித்திருப்பதாவது,

தமிழ் பேசும் மக்களே! புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டரை வருடங்களாகி விட்டன. ஆனால் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. சமாதானத்திற்கெதி (14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் கல்வியறிவின்மையே மக்களுடன் சீரற்ற உறவிற்குக் காரணம்!

- யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி

யாழ். குடாநாட்டினில் கடமையாற்றிவரும் படையினரில் 90 வீதத்திற்கும் மேலானோர் போதிய கல்வி அறிவற்றவர்களாகவே உள்ளனர். இதனாலேயே பெரும்பாலும் பொதுமக்களிற்கும், படையினருக்குமிடையேயான உறவுகளில் சீரற்ற நிலை நிலவுவதாக யாழ். மாவட்ட படைகளின் கட்ட (14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு மாபெரும் படைக்கலக் கண்காட்சி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் 10ஆம் நாள் நடைபெறவுள்ள 2ஆம் லெப் மாலதியின் 17 ஆவது நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினரின் பிரமாண்டமான ஒழுங்கமைப்பில் மாபெரும் படைக்கலக் கண்காட்சி நேற்று கிளிநொச்சி மத்திய மைதானத்தில் வெகு சிறப்பாக ஆரம்பமாகியுள்ளது. இது வரும் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு ஆரம்பமான இக் கண்காட்சியானது தமிழீழ விடுதலைப் போரில் மகளிர் படையணியின் சாதனை (14 ஆம் பக்கம் பார்க்க)



## போக்குவரத்து நேர அதிகரிப்புக்கு ராணுவ ஆளணிப்பற்றாக் குறை தடை

- யாழ்.இராணுவத் தளபதி தெரிவிப்பு

முகமாலை சோதனைச் சாவடி வழியான போக்குவரத்திற்குரிய நேரத்தை மேலும் இரண்டு மணித்தியாலங்களுக்கு அதிகரிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும், இராணுவத்திலுள்ள ஆளணிப்பற்றாக்குறை காரணமாகவே தாமதங்கள் ஏற்பட்டுள்ளதென யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நேற்று உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புக்களின் இணைய பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் இன்னும் ஐந்து நாட்களில் இதனை அமுல்படுத்துவதற்கான தீர்மானம் அறிவிக்கப் படுமென மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம்-முல்லைத்தீவு

வழ:இல:-463
தன்மை:-
மணநீக்கம்

நகுலேஸ்வரன் பணிமலர்ச்செல்வி
கண்ணகிநகர்,
விசுவமடு.

வழக்காளி

கந்தையா - நகுலேஸ்வரன்
மே./பா.கந்தையா சண்முகலிங்கம்.
கண்ணகிநகர்,
விசுவமடு.

எதிராளி

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி இலக்க வழக்கானது வழக்காளியால் 2004ஆம் ஆண்டு ஆவணி மாதம் 19ஆம் திகதியன்று எதிராளிக்கு எதிராக மணநீக்கம் கோரித் தாக்கல் செய்யப்பட்டு எதிராளியானவர் இறுதியாக வசித்து வந்த முகவரிக்கு அழைப்புக்கட்டளை அனுப்பிவைத்தும் அவ் முகவரியில் எதிராளி இல்லாமையால் இப் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எனவே இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் எதிராளியோ அவரைச் சார்ந்தவர்களோ அன்றி அக்கறையுடையோரோ மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்கத் தவறுமிடத்து வழக்கு ஒருமுகமாக விளங்கப் பட்டு வழக்காளியின் உரிமைக்கோரிக்கைக்கு அமைவாக தீர்வு காணப்படும் என இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

வரைபு:- சி.துஜிதா,
சட்டவாளர்,
4ஆம் வட்டாரம்
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
முல்லைத்தீவு.

(சி-10504)

## வரிவிளம்பரம்

### தமிழ் ஆங்கில தட்டெழுத்து

சுருக்கெழுத்துப் பயிற்சிகள் ஆரம்பமாகி உள்ளது. கற்க விரும்புவோர் காலம் 01.10.2004 தொடக்கம் 30.10.2004 வரை அனுமதிகள் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் தட்டச்சு இயந்திரங்கள் திருத்த வேலை வகுப்புக்களும் நடைபெறும். இடம் பிறைட் தொழில்சார் பயிற்சி நிலையம், ஆனந்தபுரம்,, யாழ்.சாலை, கிளிநொச்சி. நிர்வாகி (5154)

### சிறுவர் கழகங்களின் கலைநிகழ்வுகள்

சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் சிறுவர் கழகங்கள் அளிக்கும் கலை நிகழ்வு ஒக்ரோபர் 09 ஆம் திகதி மூதூர் கங்குவேலி அகத்தியர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. சிறுவர் கழகப் பிரதிநிதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம் அதிபர் எஸ்.நாகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக மூதூர் பிரதேச செயலர் ஏ.நடராஜா, விடுதலைப்புலிகள் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யுனிசெவ் பிரதிநிதி, மூதூர் முன்பள்ளி உதவிக் கலவிப் பணிப்பாளர் எஸ்உதயகுமார் ஆகியோரும கலந்து கொள்வர். அன்றைய தினம் ஊர்வலத்துடன் இணைந்ததாக வீதி நாடகங்கள் சிறுவர் கழகங்களினால் நடத்தப்படும், (25)

## வாழ்த்துகின்றோம்

### புலமைப்பரிசில் பெறுபேற்றின் பெருமை

மு/கொல்லவிளாங்குளம் அ.த.க. பாடசாலையில் முதன் முதலாக 129 புள்ளிகள் பெற்று 29ஆவது இடம் கிடைத்த பெருமைக்குரிய மாணவி செல்வி சிவானந்தம் சுமணா ஆகும். பெற்றோருக்கும், பாடசாலைக்கும், கிராமத்துக்கும் பெருமையை பெற்றுத்தந்த மாணவியை எங்கள் மனமாற வாழ்த்துகின்றோம்.

பெயர் விபரம்
கு.வினோதினி 97
இ.பானுப்பிரிஜா 50
செ.தயாழினி 32
கரத்தின பண்டார10

(சி-10567)

கொல்லவிளாங்குளம்
வாழ்பெற்றோர்

## PILLAIYAR INN GARDEN RESTAURANT
## பிள்ளையார் காடின் றெஸ்றோறன்ஸ்
### உங்களை வரவேற்கிறது


காலை உணவு - தண்டூரி சிக்கின்
மதிய உணவு - ஆட்டா/குரக்கன் பிட்டு
இரவு உணவு - கடல் உணவுவகைகள்
சிக்கின் புரியாணி நாவுக்கினிய இனிப்புப்பண்டங்கள்

மேற்கூறிய உணவுவகைகள் ஆகக்குறைந்தது மூன்றுஅல்லது நான்கு மணித்தியாலங்களுக்கு முன் ஓடர் செய்யவேண்டும். முற்கூட்டியே ஓடர்களைப் பதிவுசெய்தால் தாமதம் இல்லாமல் உணவுகளை வழங்க முடியும். உங்கள் விசேட வைபவங்கள், திருமணம், பிறந்தநாள் விழா, வியாபாரக் கூட்டங்கள், மற்றும் வைபவங்களைக் கொண்டாட குளிரூட்டப்பட்ட மண்டபங்கள் உண்டு.

உணவுகள் பார்சலாகத் தரப்படும் குறைந்தது மூன்றுமணித்தியாலங் களுக்கு முன் ஓடர் கொடுத்தவர்களுக்கு மட்டும் தரமுடியும். குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், குளிரூட்டப்பட்ட வாகனங்கள். லயன்ஏயர் (Lion Air)Expo Aviation (எக்ஸ்போ) விமானப் பயணச்சீட்டுக்கள், Espo Gas இவைகளுக்கு ஒரே இடத்தில் தொடர்புகொள்ள வேண்டிய இடம்.

பிள்ளையார் இன,
(stores)
31 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

Tel: 021 222 5595, Tel: 021 222 2829
Fax: 021 222 5595
E-.mail: Pillaiyar inn 2004 @ Yahoo.co.in
web: w.w.w.Pillaiyar inn.com (சி-10565)



## கணனிபயிற்சி நெறி ஆரம்பித்தல்

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மனிதவள அபிவிருத்தி பிரிவின் கீழ் கணனிப்பயிற்சி நெறியானது புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் அமைந்துள்ள கணனிப்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி நெறிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகைமை உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. க.பொ.த. (சா/த) ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
2. க.பொ.த.(உ/த)மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

இப்பயிற்சி நெறியை கற்க விருப்பம் உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து மாதாந்தக் கட்டணமாக ரூபா 1250 அறவிடப்படும்.

இப்பயிற்சி நெறியின் முடிவில் மனிதவள அபிவிருத்திப் பிரிவால் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆகவே மேற்குறித்த கல்வித்தகைமையை உடைய விண்ணப்பதாரிகள் 2004.10.20 ஆம் திகதிக்கு முன்பு தங்களது சுயவிபரங்களுடன் விண்ணப்பத்தினை பூரணப்படுத்தி கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

முகவரி: அரசாங்க அதிபர்,
மாவட்ட திட்டமிடல்
செயலகம்,
கச்சேரி, முல்லைத்தீவு.

(சி.10556)

## வீரவணக்கம்
## 7ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயின் மடியில்
11 - 06 - 1974



தாயக மண்ணில்
07 - 10 - 1997

தமிழீழ காவல்துறை
### தலைமைக்காவலர் நிமல்ராஜ்மியேஸ்
(கஸ்பர்/நிமல்ராஜ்மியேஸ்)

பறப்பாங்கண்டல் சிறுகுளம்
உயிலங்குளம், மன்னார்.

கனகராயன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தார். இம்மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறையினர்"

(5157)

## சூரியகல விற்பனை

நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்களின் மனங்களில் இடம் பிடித்துள்ள செல் சோலர் கம்பனியின் ஏக விநியோகஸ்தர்களாகிய முல்லை மாவட்ட சி.க.கூ. சமாசத்தின் சேவையின் மூலம் இருளில் மூழ்கிய மக்களுக்கு ஒளியூட்டி, வீட்டின் பிரகாசமான வாழ்வுக்கு மாவட்டத்திலேயே இருளை இல்லாதொழித்த செல் சோலர், இதோ இன்றே உடன் காசுக்கும், கடனுக்குமாக முல்லை மாவட்ட சி.க.கூ. சமாசத்தில் விற்பனைக்கு உதயமாகியுள்ளது.

குறைந்த விலையும்,நிறைவான தரமும், குன்றிடாத பிரகாசமும் கொண்ட இக்கம்பனியின் சூரியகலப் பாவனை மக்களின் மங்கிடா மகிழ்வைக்கொண்ட சூரியகலத்தை கொள்வனவு செய்ய முல்லை மாவட்டத்தின் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இயங்கும் சி.க.கூ. பிரதேச அலுவலகங்களினையும், பிரதேச அலுவலகங்களின் மையமாக விளங்கும் முல்லை மாவட்ட சி.க.கூ. சமாசத்தினையும் நாடி உங்கள் வீடுகளில் உறைந்துள்ள இருள் போக்கி ஒளியேற்றிக் கொள்ளுமாறு அன்பான வாடிக்கையாளர்களிற்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றேன்.

தகவல:-
தலைவர்
திரு.கா.குணசிங்கம்
முல்லை.மாவட்ட சி.க.கூ. சமாசம்

(சி-10569)

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருந்தனவென்ற புஷ்ஷின் நம்பிக்கையே யுத்தத்திற்கு காரணம்!

## -அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கருத்து

(வோஷிங்டன்)

**"ஈராக் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனுக்கும் அல்-ஹைதா இயக்கத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது என்பதற்கு போதிய ஆதாரமில்லை." என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.**


அமெரிக்க வெளியுறவுத்துறை தொடர்பான ஒரு கேள்வி பதில் நிகழ்ச்சியில் அவர் கூறியதாவது;

ஈராக் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனுக்கும் அல்-ஹைதா தீவிரவாத இயக்கத்தின ருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஈராக் மீது போர் தொடுப்பதற்கு முன் நம்பப்பட்டது. அதற்கான போதிய ஆதாரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. உளவுத்துறையினர் அது தொடர் பாக சமர்ப்பிக்கும் அறிக்கைகள் வியப்பூட்டுகின்றன. அவர்களது அறிக்கைகள் முரண்படுகின்றன.

ஈராக்கின் உள்ளேயும் வெளியேயும் தொடர்புடைய ஒருவர் அல்-ஹைதா இயக்கத்துடன் நெருக்கமானவர் என்று சமீபத்தில் ஒரு அறிக்கையில் படித்தேன் அவருக்கு அல்ஹைதா தொடர்பு இருக்கிறது என்பதையும், இல்லை என்பதையும் மிகவும் சிரமப்பட்டு அதில் நியாயப்படுத் தியிருந்தனர். கடந்த பத்து ஆண்டு களுக்கு முன் அவர்கள் இடையே தொடர்பு இருந்ததை நம்பமுடி கிறது. அப்போது இரசாயன மற்றும் பேரழிவு ஆயுதப் பயிற்சி வழங்கியதை ஓரளவு நம்பலாம். இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய அப்போது திட்ட மிட்டிருக்கலாம் ஆனால் தற் போது அதற்குரிய ஆதாரம் எதுவு மில்லை.

ஈராக் மக்கள் மீதும், அண்டை நாடுகள் மீதும் பேரழிவு ஆயுதங் களைச் சதாம் ஹுசைன் பயன் படுத்தியதாக அமெரிக்க சனாதி பதி புஷ் திடமாக நம்பினார். அந்த ஆட்சியை அகற்ற விரும் பினார் அதுதான் போருக்கு முக் கிய காரணம். ஆனால் அங்கு பேரழிவு ஆயுதங்கள் எதையும் எங்களால் கண்டு பிடிக்கமுடிய வில்லை.

உளவுத்துறையின் தவறான தகவல் பற்றி நான் கருத்துக் கூற விரும்பவில்லை. அதுபற்றி எனக் குத் தெரியாது. ஆனால் சதாம் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு உல கம் நிம்மதியாக இருக்கிறது. இவ் வாறு ரம்ஸ்பீல்ட் கூறினார்.



தென் கரோலினாவி லிருந்து இராணுவ பயன் பாட்டுக்கென புளுட்டோனி யத்தை பிரான்சுக்கு கொண்டு வரும் கப்பலுக்கு நோர்மண்டியில் பாதுகாப் பளிக்கும் உலங்கு வானூர்தி.

### வெறுப்புணர்வு அதிகரிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் முஸ்லிம் களுக்கு எதிரான வெறுப்புணர்வு அதிகரித்து வருகிறது. அமெரிக் கர்களில் நான்கில் ஒருவருக்கு இத்தகைய வெறுப்புணர்வு நிலவு கிறது. கடந்த 2001 செப்ரெம்பர் கோரச்சம்பவத்துக்குப் பிறகுதான் இந்த வெறுப்பு அதிகரித்துள்ளது.



ஈராக்கின் பலூஜாவில் நேற்று இடம் பெற்ற அமெரிக்கப் படையினரின் விமானத்தாக்குதல் ஒன்றில் சேதமுற்ற வீடுகளை பார்வையிடும் உள்ளூர் வாசிகள்.

# காஸாவில் இஸ்ரேலியப் படையினர் தாக்குதல் 3 பலஸ்தீனர்கள் பலி; 10 சிறுவர்கள் காயம்!

(ரமல்லா)

பலஸ்தீனத்தின் காஸா முனையின் வடபகுதியில் இஸ்ரேலிய டாங்கிகள் நேற்றுக்காலை நடத்திய தாக்குதலில் 3 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதுடன் விடுகளில் இருந்த 10 சிறுவர்கள் காயமடைந்துள் ளனர். ஜபாலியா அகதிமுகாம் பகுதியிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

காஸா முனையில் 7 நாட்களாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 45 தீவிரவாதிகள் உட்பட 75 பலஸ்தீனர்களும் 3 இஸ்ரேலியர்களும் உயிரிழந் துள்ளனரென வெளியாகும் தகவல்கள் தெரிவிக் கின்றன. நேற்று முன்தினமும் இஸ்ரேலிய இராணுவ விமானங்கள் நடத்திய தாக்குதலில் இஸ்லாமிய ஜிகாத் தீவிரவாதக் குழுவின் தலைவர் கொல்லப் பட்டார். சிலமணி நேரத்தில் இஸ்ரேலிய உலங்கு வானூர்திகள் நடத்திய தாக்குதலில் அல்அக்ஸா பிரிவைச் சேர்ந்த 2 தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர். இவற்றிற்கு பதிலடி கொடுக்கப்படுமென்று ஹமாஸ் இயக்கம் சூளுரைத்துள்ளது.



இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதலில் காய முற்ற 3 வயதுடைய சபரின் பெல்பெல் என்ற பலஸ்தீனச் சிறுமி

# டர்பூர் பிரச்சினை குறித்து பிளேயர் சூடான் தலைவர்களுடன் ஆராய்வு

சூடானில் டர்பூர் பிரச்சினை பற்றி ஆராயவென பிரிட்டிஷ் பிர தமர் ரொனி பிளேயர் நேற்று சூடானுக்கு விஜயம் மேற் கொண்டுள்ளார்.

எதியோப்பியா செல்லும் வழி யில் 5 மணித்தியாலங்கள் அங்கு தங்கியிருந்து சூடான் சனாதிபதி யையும், உப சனாதிபதியையும் சந்தித்து உரையாடியுள்ளார். ஏற் கனவே அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஐக்கிய நாடுகள் செய லாளர் நாயகம், ஐரோப்பிய நாடு களின் வெளிவிவகார அமைச்சர் கள் ஆகியோரும் சூடானுக்கு விஜயத்தை மேற்கொண்டு அதி காரிகளுடன் கலந்துரையாடியுள் ளனர்.

இது தொடர்பாக ஐக்கிய நாடு கள் சபைத் தகவல் தருகையில் உலகின் மிக மோசமான மனிதா பிமான நெருக்கடி நிலைமை டர் பூரில் ஏற்பட்டுள்ளது என்று தெரி வித்தது.

50 ஆயிரம் மக்கள் உயிரிழந் துள்ளனரென்றும், 17இலட்சம் மக்கள் அகதிகளாக வெளி நாடுகளில் தங்கியுள்ளனரென்றும் தெரிவித்துள்ளது.

### விமான விபத்து

சூடானின் அல்ஒபிட் விமான நிலையத்திலிருந்து கியூபா நோக்கிப் புறப்பட்ட சரக்கு விமானமொன்று நேற்று முன் தினமிரவு விபத்துக்குள்ளாகி யதனால் 4 ரஷ்ய விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகச் சூடான் வானொலி தகவல் தரு கையில் விமான நிலையத்தி லிருந்து அவ்விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் வானொலித் தொடர்பு அற்றுப்போனதனால் விமானத்தைக் கண்டுபிடிக்க வென 3 விமானங்களை அனுப் பிய போதும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை எனத் தெரி விக்கப்படுகின்றது.



காஸாவிலுள்ள கபா டரோம் யூத குடியிருப்பு பகுதியில் தேடுதல் நடத்தும் இஸ்ரேலியப் படையினர் நேற்றுப் பலஸ்தீன ஆயுததாரி களின் தாக்குதலில் இஸ்ரேலியர் ஒருவர் கொல்லப்பட்டதையடுத்தே இத்தேடுதல் நடைபெற்றது.

# பெற்றோல், டீசல் விலைகளில் அதிகரிப்புச் செய்ய மாட்டோம்

## -இந்திய பெற்றோலியத்துறை அமைச்சர்

(புதுடில்லி)

சர்வதேச சந்தையில் ஒரு பீப்பா கச்சா எண்ணெயின் விலை 51டொலராக உயர்ந்துள்ள போதிலும் பெற்றோல், டீசல் விலை உயர அரசு அனுமதிக் காது என்று இந்திய பெற்றோலி யத்துறையமைச்சர் மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இது தொடர்பாக கருத்துத் தெரி விக்கையில், கச்சா எண்ணெயின் இந்த விலையேற்றத்திலிருந்து நுகர்வோர் நலன் தொடர்ந்து பாதுகாக்கப்படுமென்று கூறினார். உலக சந்தையில் கச்சா எண் ணெய் விலையேற்றத்தினால் ஏற்படும் பாதிப்புப் பற்றி விவா திக்க பிரதமரை அடுத்த வாரம் சந்திக்க விருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# உலகில் போர்க் குற்றங்களை விசாரிக்க சர்வதேச நீதிமன்றிற்கு ஐ.நா நிதியுதவி

(நியூயோர்க்)

உலக நாடுகளில் நிகழும் போர் தொடர்பான குற்றங்களை விசாரிக்கும் சர்வதேச கிரிமினல் நீதிமன்றத்தின் நிர்வாகச் செல வீனங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் நிதியுதவியைப் பயன் படுத்திக்கொள்ள ஒப்புதல் வழங் கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஒப்பந்தம் ஐ.நா தலைமையகத்தில் திங்கட் கிழமை கையெழுத்தானது. இதில் ஐ.நா தலைமைச் செயலர் கொபி அனானும், சர்வதேச கிரிமினல் நீதிமன்றத்தின் தலைவரும் கன டாவைச் சேர்ந்த நீதிபதியுமான கிர்செக்கும் கையெழுத்திட்டனர். தொடர்பான நிரந்தர முதல் நடுவர் மன்றம் இது தான் என்பது குறிப் பிடத்தக்கது. உலகில் போர்க் குற்றங்கள்

# இந்தியா—ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் மாநாடு ரத்து!

(பிரஸல்ஸ்)

இம் மாதம் நெதர்லாந்து ஹேக் நகரில் நடைபெறுவதாக இருந்த இந்திய மற்றும் ஐரோப்பிய யூனியன் தலைவர்களின் மாநாடு ரத்துச்செய்யப்பட்டது. ஐரோப்பிய யூனியன் சார்பில் நெதர்லாந்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் உள் நாட்டில் கடும் பிரச்சினைகள் இருப்பதால் உச்சி மாநாட்டை இரத்துச்செய்ய வேண்டும் என்று இந்திய அரசு கோரியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மாநாடு நடை பெற புதிய திகதி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

# மன்னார் வளைகுடாவை பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தத் திட்டம்

(வவுனியாசெய்தியாளர்)

**மன்னார் வளைகுடாவை பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தல் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மன்னார் அரசசெயலகத்தில் நடைபெற்றுள்ளது.**

மன்னார் அரசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமை தாங்கினார். இதில் மீன்பிடி அமைச்சின் செயலாளர், வன்னி மாவட்டபாராளுமன்ற உறுப் பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், வினோநோதராதலிங்கம், சிறிலங்கா கடற் படைத் தளபதி றியர் அட்மிரல் ரட்ண கீர்த்தி உட்படபலர்கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர். இக்கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட கரையோர பாது காப்பு தொடர்பாகவும், இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையேயான பிரதேசத்தில் இந்தியமீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிப்பிரச்சினை உட்பட பல பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு மன்னார் வளைகுடாவைபாதுகாக்கப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. (10)

# மன்னார் நகர மண்டபத்தில் சர்வதேச முதியோர் தின விழா

(மன்னார்)

சர்வதேச முதியோர்தின நிகழ்வுகள் கடந்த திங்கட் கிழமை மன்னார் நகர மண்டபத்தில் காலை 9.00மணியளவில் மன்னார் சர்வோதய இணைப்பாளர் தீஜீவரட்ணம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

கொழும்பு சர்வோதய இயக்கத்தின் சமூகசுகாதாரப் பிரிவு நிறைவேற்று இணைப்பாளர் திருமதி விமலா ரணதுங்க வருகை தந்து சிறப்புரையினை ஆற்றினர்ர். அத்துடன் மன்னார் மாவட்ட அரசசார்பற்ற ஒன்றியங்களின் தலைவர் மரியநாயகம் குரூஸ் முக்கிய உரைகளை ஆற்றினார்.

முக்கியமாக சமுதாயத்தில் முதியோர்கள் மதிக்கப்படவேண்டும் அவர்களுக்கு ஏற்படும் நோய்கள் உடனடியாக இனங்காணப்பட்டு அதற்குரிய சிகிச்சைகளும் வழங்கப்படவேண்டுமெனவும் கேட்கப்பட்டது. அத்துடன் நூற்றுக்கு மேற்பட்ட முதியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் முதியோர் தொடர்பான கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. நிகழ்வை மன்னார் சர்வோதய இயக்கத்தினர் நடத்தினர். (மி)

## பூநகரி பகுதி பாடசாலைகளின் ஆசிரியர் தின விழா

கிளி/ பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலையின் சாரணர்குழாத்தையும், மாணவர்களையும் தன்னகத்தே கொண்ட இவ் ஆசிரியர் தின விழாவைச் சிறப்பாக நேற்றுக் கொண்டாடியது.

விழாவின் ஆரம்ப நிகழ்வாக நாலாங்கட்டையிலுள்ள பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஆசிரியர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தலைமையில் நிகழ்வுகள் நடாத்தப்பட்டு ஆசிரியர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கிக்கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கடற்புலிப் பொறுப்பாளர் S.அமுதன் கலந்து கொண்டார்.

கிளி.சுண்ணாவில் அ.த.க பாடசாலையில் ஆசிரியர் தினம் பள்ளிக்குடா இளைஞர் வட்டத்தின் ஏற்பாட்டில் பாடசாலையில் இருந்து அதிபர், ஆசிரியர்கள் முருகன் கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அடுத்து தேவாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு மதிய போசன விருந்து கொடுக்கப்பட்டது இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்குத்தந்தை லிபோ ஆம்ஸ்ரோங் கலந்து கொண்டார். அத்துடன் கடற்றொழில் சங்கத்தலைவர் பிரான்சிஸ் ஒத்துழைப்பு வழங்கி சிறப்பாக நடத்தினார். பெற்றோரின் பங்கும் முக்கியஇடம்வகித்தது.

அத்துடன் கிளி ஞானிமடம் அ.த.க பாடசாலையில் பிள்ளையார் கோவில் பூசை நடந்து ஆசிரியர்ளுக்கு மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளர் தலைமையில் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

பூ.ம.வித்தியாலயத்திலும் ஆசிரியர் தினம் சிறப்பாக நடைபெற்றது. ஆசிரியர்கள் வாடியடி முனையப்பர் கோவிலில் இருந்து பூசை செய்து மாலை அணிவித்து பெற்றோரினால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு மதிய போசன விருந்தும் வழங்கப்பட்டது.

கடந்த கறுக்காய்த்தீவு ம.வி. இல் முருகன் ஆலயத்தில் இருந்து ஆசிரியர்கள் அழைத்துச் செல்லப்பட்டு விசேட பூசை நடைபெற்று மாலை அணிவித்து மதியபோசன விருந்து வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். (34)

## மன்னார் வட்டக்கண்டலில் இடம்பெற்ற பன்னிருவேங்கைகளின் நினைவு நிகழ்வு

(அடம்பன்)

லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட பன்னிருவேங்கைகளின் பதினேழாம்ஆண்டுநினைவு நிகழ்வுகள் அடம்பன் பிரதேசத்தில் உள்ள வட்டக்கண்டல் பாடசாலையில் காலை9.00மணியளவில் பாடசாலையின் மாணவத்தலைவன் வசிகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாகப் பொதுச்சுடரினைப் பாடசாலை அதிபர் ஏற்றிவைக்கத் தேசியக் கொடியினைப் பிரதேசஅரசியல் துறைப் பொறுப்பாளர் காஞ்சனன் ஏற்றினார். தொடர்ந்துபன்னிரு வேங்கைகளுக்குமான ஈகச் சுடர்களும் ஏற்றப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. இந்நிகழ்வில் நினைவுரைகளைப் பாடசாலையின் அதிபர்கள், மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கை, பிரதேசப் பொறுப்பாளர் காஞ்சனன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் இந் நிகழ்வு எழுச்சியுடன்நடந்து முடிந்தது.

## வைத்தியசாலை தொண்டர்கள் 1000 பேரை நிரந்தரமாக்க நடவடிக்கை

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் தொண்டர்களாகக் கடமையாற்றும் 1000 சிற்றூழியர்களை நிரந்தரமாக்க வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன நடவடிக்கை எடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்குமாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் தொடர்ந்து நிலவிவரும் ஊழியர் பற்றாக்குறையைப் போக்கதொண்டர்களாக பல்லாண்டுகளாகக் கடமையாற்றிவரும் 1000 சிற்றூழியர்களை நிரந்தரமாக்க அவர்களின் பெயர்ப்பட்டியலை அனுமதிக்கத் திறைசேரிக்கு அனுப்பி வைத்துள்ளார். திறைசேரி அனுமதி கிடைத்ததும் இவர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளனர். (10)

## 2ஆம் லெப். மாலதி நினைவாக சேமமடுவில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை

2ஆம் லெப் மாலதி அவர்களின் நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை சேமமடு சண்முகானந்தாவித்தியாலயத்தில் திலீபன் மருத்துவ சேவை நடைபெற்றது. இந் நிகழ்வின் முதலாவது நிகழ்வாகப் பொதுச் சுடரினை நடாமாடும் திலீபன் மருத்துவசேவை வைத் தியர் தேவா அவர்களும், வவுனியா மாவட்ட நடமாடும் வைத்திய சேவை மருத்துவர் செல்வி அ.தர்மலிங்கம் அவர்களும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல் ஏற்றி வைத்தார். 2ஆம் லெப்.மாலதி அவர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை சேம மடுப்பிரதேசப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றிவைக்க மலர் மாலையினை வவுனியா மாவட்ட மகளிர் அரசியல துறைப் பொறுப்பாளர் அலை அணிவித்தார்

அகவணக்கத்தினைத் தொடர்ந்து தலைமையுரையினை வவுனியா வடக்கு அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் ஆவர்த்தனா நிகழ்த்தினார். கருத்துரைகளை வவுனியா, மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல், நடமாடும திலீபன் மருத்துவ சேவை மருத்துவர் தேவா வவனியா மாவட்ட மகளிர் அரசி யல்துறைப் பொறுப்பாளர் அலை ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பற்சிகிச்சை, இரத்ப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை ஏனைய நோய்களும் பார்வையிடப்பட்டது. இதில் திலீபன் மருத்துவ சேவை போராளிகளும கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகள் யாவும் சேமமடுப்பிரிவு அரசியல் துறையின் ஆதரவுடன் நடைபெற்றது. இதில் வவுனியா மாவட்ட மாணவர் அமைப்பினரின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இலகுவாக மருத்துவப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் மக்களை ஒழுங்குபடுத்தி சேவை புரிந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் 350 மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

### சிரமதானப்பணி

(மல்லாவி)

2 ஆம் லெப் மாலதியின் தினத்தை முன்னிட்டு அனிஞ்சியன் குளம் அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து காலை 9.00 மணிக்கு சிரமதானப்பணிகளை அதிபர் தலைமையில் மேற்கொண்டனர் , இதில் பாடசாலை மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (24)

### தானியம் வழங்கல்

ஒட்டுசுட்டான் பிரதேச-செயலாளர் பிரிவில் திருமுறி கண்டி கிராமத்தில் முல்லை. மாவட்ட உணவு விவசாயஸ்தாபனத்தினரால் 80 நெற்செய்கை பயனாளிகளுக்கும், 73 சிறுதானிய பய னாளிகளுக்கும் 15 வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கும் விதை தாணியங்களும், பசளையும் முல்லை மாவட்டவிவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் மற்றும் திருமுறிகண்டிகிராம கமக் குழுவின்ஆதரவுடன் முல்லை மாவட்ட உணவுவிவ சாயஸ்தாபணத்தின் உதவி இணைப்பாளர் அவர்களால் வழங்கப்பட்டது.

## ஒட்டுசுட்டானில் கணினிமையம் திறப்பு

நோர்வே ரெக் நிதி உதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் கணினிப்பயிற்சி நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை பொருண்மிய மதியுரையக இயக்குனர் தாஸ தலைமையில் திறந்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் ஈகச்சுடரினை ஒட்டுசுட்டான் கோட்டஅரசியல் துறைப் பொறுப்பாளர் ஈழவன் ஏற்றினார்.

தமிழீழத்தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார். நிறுவனக் கொடியினை ரெக் நிறுவனஇணைப்பாளர் விமலேந்திரன் ஏற்றினார்.

பெயர்ப்பலகையினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.கனகரத்தினம் திறந்து வைத்தார்.

மங்கல விளக்கினை வன்னி ரெக் சிவகோபால், மலேசியா ரெக் மலர் ஒட்டுசுட்டான் த.பொ.மே. பிரதேசஇணைப்பாளர் தயா ஆகியோர், ஏற்றினார். கணினி நிலையத்தின் நாடா வினை மலேசியா ரெக்கைச் சேர்ந்த மலர் திறந்து வைத்தார். கணினிப் பயிற்சி நெறியினை வன்னிரெக்கோபால் ஆரம்பித்துவைத்தார்.

சிறப்புரைகளை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கனகரத்தினம், பொருண்மிய மதியுரையக இயக்குனர் தாஸ், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (20)

### புதியகட்டடங்கள் திறப்பு

மன்னார் மாவட்டத்தில் "நிகொட்"நிறுவனத்தால் செய்து முடிக்கப்பட்ட பள்ளமடு அரசினர் வைத்தியசாலை, விடத்தல்தீவு மீனவர் ஓய்வு மண்டபம், அடம்பன் மத்தியமகாவித்தியாலயத்தின் 2மாடிக்கட்டடம், விடத்தல்தீவு மீன்பிடி அதிகாரிகள் விடுதி ஆகியவற்றை நிகொட்நிறுவன மாகாணபபணிப்பாளர் லங்கா நேசன் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார். (மி)

## மக்களின் போராட்டத்தையடுத்து இரு இளைஞரும் விடுதலை

(மன்னார்)

மன்னார்பேருந்து நிலையத்தில் வைத்து இரண்டு தமிழ் இளைஞர்கள்கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிசாரால் கைது செய்யப்பட்டதையடுத்து பொது மக்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மன்னார் அலுவலகத்தின் முன்திரண்டு நின்று மேற்படி இரு இளைஞர்களையும் உடனடியாக விடுவிக்குமாறு கோரினர்.இதனையடுத்து இரு இளைஞர்களினதும் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்த பொலிசார் அவர்களை விடுவித்தனர். (மி)




கிளி.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் உலக விவசாய உணவுத்திட்டத்தின் கீழ் (F.I.O) ஜெயந்திநகர் கிராம விவசாயிகள் 216 பயனாளிகளில் 40 பயனாளிகளிற்கு ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கான விதை நெல்லும், அதற்கான இரசாயனப் பசளையுமாக மொத்தம் 3540 ரூபா பெறுமதியான பொருட்களும், 176 பயனாளிகளிற்கு அரை ஏக்கர் சிறுதானியம் மேற்கொள்ளக்கூடிய கௌப்பி, உழுந்து அதற்கான பசளையுமாக மொத்தம் 2750 ரூபா பெறுமதியான பொருட்களும் வழங்கப்பெற்றன. இந்நிகழ்விற்கு த.பொ.மே.நிறுவன கிளிநொச்சிப் பிரதேசப் பொறுப்பாளர் இ.மங்களேஸ் கிளி.நகர்பிரதேச இணைப்பாளர் சி.சிவனேசன், உணவு விவசாய நிறுவனக் கிளி.மாவட்ட இணைப்பாளர் மா.செல்வராசா மற்றும் கமக்கார அமைப்பினர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (சோ)



# வரலாற்றின் கண்காட்சி



மைதானம் முழுவதும், மைதானத்தின் பின்புற வெளியும், சோலையும் புத்துயிர்ப்பு பெற்று மாபெரும் கண்காட்சி ஆரம்பமானது. விளையாட்டுத்திடலாகவும், உலங்கு வானூர்தி வந்து இறங்கி, ஏறும் வெளியாகவுமிருந்த கிளி/மத்தியமைதானம், நேற்றுக் காலையில் களைகட்டத் தொடங்கியது.

நேற்றுத்தான் என்றும் சொல்லமுடியாது. இன்றிலிருந்து இரு வாரங்களுக்கு முன்னரேயே பெண் போராளிகளின் கடும் உழைப்பு ஆரம்பமாகியிருந்தது. ஆண்போராளிகளும்



கூடத்தான். குற்றிகளையும், ஓலைகளையும், முட்கம்பிச் சுருள்களையும் இன்னும் என்னவென்று தெரியாத மூடப்பட்ட பொருள்களையும் ஏற்றிய ஊர்திகள் பரபரப்பாக மைதானத்தின் பின்புறம் போவதும் வருவதுமாக இருந்தபோதே, பலரது புருவங்கள் உயர்ந்தன.



“என்ன நடக்கின்றது”

முன்புறம் மைதானத்தில் ஒரு பகுதி ஓலைகளால் மூடி மறைக்கப்பட்டு, அதற்குள்ளும் ஏதோ பரபரப்பு

“அட, என்ன தான் நடக்கின்றது?”

இதுதான் நடக்கின்றது என்று 06 ஆம் திகதி காலைதான் அனைவருக்கும் விளங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வலுவை வெளிப்படுத்துகின்ற மகளிர் படையணிகளின் போரியல் வரலாற்றை விளக்குகின்ற மாபெரும் கண்காட்சி, 02ஆம் லெப். மாலதியின் நினைவு நாளையொட்டி ஆரம்பமானது.

02 ஆம் லெப். மாலதி! தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் முதல் மாவீராங்கனை. தலைவர் அவர்களால் நேசமுடன் தரப்பட்ட M16 சுடுகலனை தன்னிலும் மேலாகக் கருதி, இந்திய வல்லாதிக்கப் படைகளுடன் மோதிய கோப்பாய்ச் சமர்க்களத்திலிருந்து, அந்தச் சுடுகலனை, கவனமாக வெளியேற்றிய பின்னரே உயிர்துறந்த பெருமைக்குரியவர். அந்த வீராங்கனையின் நினைவு நாளிலே மாபெரும் படைக்கலக் கண்காட்சி எங்கள் கண்முன் விரிகின்றது.

**கிளியில் மகளிர்படையணிகளின்**
**மாபெரும் போரியல் வரலாற்றுக் கண்காட்சி**
**01.10.2004–10.10.2004**

அன்று M16 ஏந்திய கரங்களெல்லாம், அதன் பின்னர் வந்த நாட்களிலே ஏந்திய சுடுகலன்கள், இயக்கிய மோட்டார்கள், உருவாக்கிய வெடிபொருட்கள், படகுகள் யாவும் வரிசைகளாக, மைதானத்தின் பாரிய பரப்பில் வைக்கப்பட்டுள்ளன. ஒரு கைத்துப்பாக்கியுடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த தலைவர் அவர்களின் கனவுகளின் விரிவாக்கம் கண்ணெதிரே தெரிகிறது.

‘‘விடியல் படைவீடு” அது ஒரு படைத்தளம். கண்ணிவயல், முன்னரங்கக் காப்பரண்கள், நகர்வகழிகள், தூர அவதானிப்பு நிலையங்கள், ஆதரவுச் சூடுகளை வழங்கப் பொருத்தமான இடங்களில் மோட்டார்கள், வான்காப்புக்கு 50.கலிபர் துப்பாக்கி, இன்னும் பலம் கூடிய படைக் கலன்கள் எனப் பலவும்......

மோட்டார் ஒன்றைத் தடவிப் பார்த்த அன்னையொருவர் “உந்தப் பெரிசையெல்லாம் தூக்கிறனீங்களோ பிள்ளையள்!” என்றார் வியப்புடன்.




சூட்டுப்போட்டி முதல்நாளே களை கட்டி விட்டது. போட்டியில் பங்கெடுத்த பெண்களின் தொகை நூறையும் கடந்து விட்டிருந்தது.



இன்னும் பல உண்டு பார்வையிட. மாபெரும் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி, அது நிதித்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கோதை அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. படைக்கலக் கண்காட்சி, போர்ப்பயிற்சி ஆசிரியர் அணியின் பொறுப்பாளர் அஜந்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மகளிர் காவல்துறைப் பணிமனை, தமிழ்க் காவற்றுறையின் பதில் பொறுப்பாளர் மாதவன் அவர்களாலும், இராணுவ மருத்துவமனை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் அவர்களாலும், கடற்புலிகளின் இறங்குதுறை கடற்புலிகளின் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி விடுதலை அவர்களாலும், விடியல் படைவீடு லெப்.கேணல் பொன்னம்மான் கண்ணிவெடிப்பிரிவின் பொறுப்பாளர் நவநிதி அவர்களாலும், மாவீரர்நினைவு மண்டபம் லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத் தளபதி கோபால் அவர்களாலும் திறந்து வைக்கப்பட, சூட்டுப் போட்டியானது படைய தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கவிதா அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் முதலாவது அணியினருக்கு லெப்.கேணல் பொன்னம்மான், மேஜர் அன்பு உட்பட மூத்த ஆண் போராளிகள் சூட்டுப் பயிற்சியை வழங்கியிருந்தார்கள். இன்று 02 ஆம் லெப். மாலதியின் நினைவு நாளிலே பெண் போராளிகளிடம் இளைஞர்கள் வந்து சுட்டுப் பழகிக் கொண்டிருப்பது காலமாற்றத்திற்கு நல்லதொரு சாட்சி.

சரி இனி ஏனைய விடயங்கள் என்னென்ன நடந்தன? நாளை பார்ப்போம்.



# சமாதானத்தை — விலைகொடுத்து வாங்க முடியாது

**பேராசிரியர் குமார் ரூபசிங்க**
**லங்காதீப சிங்கள நாளிதழ்**
**மொழியாக்கம அ.சக்திவேல்.**

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பமாகிய சமாதானப் பேச்சுவார்த்தைகள் நாளுக்குநாள் பின் தள்ளப்படுகின்ற நிலையில் உள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தை எப்படியாவது ஆரம்பிக்க வேண்டும் என்பதே சனாதிபதியின் நிலைப்பாடு. சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் வரும் எதிர்ப்புக்களை எப்படியாவது சமாளிப்பது என்பதைப்பற்றி அவர் இப்பொழுது சிந்திக்கத் தொடங்கியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலின் பொழுது ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானப் பேச்சுவார்த்தைத் திட்டத்தை விட தான் சிறந்த திட்டங்களை முன்வைத்துள்ளேன். கைகளில் இருந்து தெரியவருகின்றது. இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதில் இருந்து விடுதலைப்புலிகள் ஒருபோதும் பின் வாங்கமாட்டார்கள் என்று சனாதிபதிக்குத் தெரியும். ஆகவே தான் இடைக்கால நிர்வாகம் பற்றிக் கதைப்பதற்கு தற்பொழுது முன் வந்துள்ளனர். இதில் அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் தமது நிலைப்பாடுகளை விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை. இரு தரப்பும் தமது பலத்தை நிரூபிப்பதற்கு முயற்சிகள் செய்தவண்ணமுள்ளன. ஆகவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நிகழ்ச்சி நிரல் ஒரு தடங்கல் அல்ல.

எதிர்காலத்தில் ஆரம்பமாகும் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் மிக எனக்குறிப்பிடுவார்கள். இக்காலத்தில் சனநாயக வழிமுறைகளைப் பற்றியும் சனநாயக ஆட்சி பற்றியும் பரீட்சார்த்த செயற்பாடுகள் இடம்பெறும். சனநாயக முறையில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியுமா? என்பதைப்பற்றி ஒரு பலப்பரீட்சை நடைபெறும். இது இடைக்கால ஆட்சி சம்பந்தப்பட்டதாக இருந்தால் நாம் பயப்படுவதற்கு அவசியமில்லை.

*1995,1997,2000*ஆம் ஆண்டுகளில் நாட்டை ஆட்சி செய்தவர்கள் பல யோசனைகளை முன்வைத்தார்கள். இந்த யோசனைகளின் அடிப்படையை வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும். அரசாங்கத்தின் யோசனைகளுக்கும், விடுதலைப்புலிகளின் யோசனைகளுக்கும் இடையில் வார்த்தைகளில் நிச்சயமாக வடக்குக்கிழக்கு இணையப்போகிறது. இதைத் தடுக்க முடியாது. ஆகவேதான் அரசு வெகுவிரைவில் இடைக்கால நிர்வாகம்பற்றி கலந்தாலோசிப்பதற்கு சகல கட்சிகளுக்கும் அழைப்பிதழ் விடுத்துள்ளது. இடைக்கால ஆட்சியை விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதற்கு முன்பதாக இங்குவாழும் சிங்கள முஸ்லிம் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் உள்ள சிங்கள மக்களையோ அல்லது முஸ்லிம் மக்களையோ விடுதலைப்புலிகள் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். பகைத்துக்கொள்வதற்கு அவசியமும் இல்லை. எதிரிகள் இருந்தால் ஆபத்து என்பது விடுதலைப்புலிகளுக்கும் தெரியும்.

அதைத் திறம்பட நடத்துவதற்கு எமக்கு அதிகாரத்தைத் தாருங்கள். ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அதிக குறைபாடுகள் உள்ளன. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பேன் என சூளுரைத்து ஆட்சியைக் கைப்பற்றினார்.

டோக்கியோ நிதியைப் பெறுவதற்கு சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். இல்லையேல் நிதிகிடைக்காது என நிதிவழங்கும் நாடுகள் சந்திரிகாவுக்கு கூறிவிட்டன. சமாதானப் பேச்சுக்கள் பின்போடப்பட்டால் டோக்கியோ நிதி கிடைக்காது எனவும் அது வேறுநாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தப் போகிறோம் எனவும் நிதி வழங்கும் நாடுகள் இலங்கை அரசுக்கு கூறியுள்ளன. எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க வேண்டும். இதுவே தற்போதைய சனாதிபதியின் நிலைப்பாடாகும்.

அவர் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகப் பேசுவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளார் என்பது தற்போதைய அரசியல் நடவடிக் முக்கியமானதொன்றாகும். ஆனால் அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக முற்றிலும் வேறுபாடான கருத்துக்களைக் கொண்டுள்ளமையால் பேச்சுவார்த்தைகள் தடைப்படும். இடைக்கால ஆட்சி சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் ஜே.வி.பி. அரசாங்கத்தை வெளியேற்றும் எனத் தற்பொழுது பிரச்சார மேடைகளில் கூறுகின்றது.

அதிகாரப் பரவலாக்கும் பொழுது இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாப்பது மிக அவசியம். ஒரு நாட்டில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் பொழுது தென் பகுதி அரசியற்கட்சிகள் யாவும் ஒரேகருத்தினைக் கொண்டிருப்பது மிக அவசியம். பேச்சுவார்த்தைத் தீர்வின் கடைசி முடிவு நிலையானதாக இருக்க வேண்டும். அநேகரின் அறிக்கைகள் இறுதித்தீர்வின் பின் இடைக்கால ஆட்சி பற்றிக் கதைப்பது மிகச் சிறந்ததெனக் கூறுகின்றனர். உலக நாடுகளில் நடந்த சிவில் யுத்தங்களுக்குப் பிறகு இடைக்காலப் பேச்சுவார்த்தைகளுக்கு குறிப்பிட்ட காலங்கள் ஒதுக்கப்படுவது வழமையானதாகும். இதற்கு பரிமாற்ற காலங்கள் பலவேறுபாடுகள் தோன்றலாம். இந்த வேறுபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தைகளில் குறைபாடுகளைப் பேசித்தீர்த்துக் கொள்ள முடியும். வடகிழக்கைப் பிரிக்க முடியுமா முடியாதா என்பது மற்ற விடயமாகும். வடகிழக்கு இணைப்பால் பல அபிப்பிராய பேதங்கள் அரசியல் கட்சிகளுக்கிடையில் தோன்றின. இது சரித்திர உண்மை. *1987*ஆம் ஆண்டு இந்திய, இலங்கை ஒப்பந்தப்படி வடக்கு கிழக்கை ஒரு பிரதேசமாக அப்போதைய சனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா அங்கீகரித்தார். ஒருவருடத்திற்குப் பிறகு சர்வசன வாக்கெடுப்பை நடத்தி மக்கள் தீர்ப்புக்குப் பிறகு வடக்கு கிழக்கை இணைப்பதற்கு சம்மதம் தெரிவித்தார். ஆனால் 17 வருடங்கள் முடிந்தும் இன்னமும் சர்வசன வாக்கெடுப்பு இந்த நாட்டில் நடைபெறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ வடக்கு கிழக்குத் தனிமாகாணமாகப் பிரிவதை விரும்பவில்லை.

ஆனால் ஆரம்பமாகப் போகும் இடைக்கால ஆட்சிமுறைப் பேச்சு ஆனபடியால் அவர்கள் முஸ்லிம் மக்களைப் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். வடக்குக் கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் பயப்படுவதில் அர்த்தம் உண்டு. இவற்றைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளலாம். இதைப்பற்றி சில சிங்களக் கட்சிகள் கதைப்பதற்குத் தயாரில்லை. தனது அரசியல் இலாபங்களுக்காக இவை ஒதுங்கி நிற்கின்றன.

இதேவேளை சமஷ்டி ஆட்சி முறை தமிழீழத்திற்கு சமமான தொன்றாகும் எனச் சிலர் விளக்கம் கொடுத்துள்ளனர். இந்த விளக்கத்தை நாங்கள் ஆராய்ந்து பார்ப்போம். சமஷ்டி என்பது தங்களைத் தாங்களே ஆள்வது. இதைவிட சமஷ்டி ஆட்சிமுறை இந்த நாட்டுக்குச் சிறந்ததாகும். ஐக்கிய இலங்கைக்குள் ஆட்சி செலுத்துவதென்றால் சமஷ்டிமுறையே இதற்குச் சிறந்த வழியாகும். இதைநான் பல தடவைகள் பத்திரிகைமூலம் அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளேன். சந்திரிகாவுக்கும் பல தடவைகள் கூறியிருக்கிறேன். இவைகள் . யாவும் செவிட்டு யானையின் காதில் சங்கு ஊதியதிற்கு சமமாகவுள்ளது.

தற்பொழுது மட்டக்களப்பில் கருணா தரப்பினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடக்கும் மோதல்களைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தி அவர்களைச் சமாதான மேசைக்கு அழைபபது நல்லதெனச் சிலர் விவாதிக்கலாம். இது ஒரு அர்த்தமற்ற விவாதமாகும். விடுதலைப்புலிகளின் இராணுவப்பலம் குறையவில்லை என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். கடந்த காலத்தில் சமாதானத்திற்கான யுத்தம் ஒன்றை சந்திரிகா பிரகடனப்படுத்தினார். பிறகு என்ன நாட்டில் நடந்தது என்பதைப் பார்ப்போம். கட்டுநாயக்க விமானத்தளம், இலங்கை மத்திய வங்கி என்பன தாக்கப்பட்டதால் அரசாங்கம் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது. கருணாவின் சவால்களைப் பெரிதுபடுத்த முடியாது. கருணாவின் பிரச்சினையைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு ஆடாமல் நாட்டில் முக்கியமான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வாருங்கள்.

சமாதானத்தை விலைகொடுத்து வாங்கமுடியாது. இரு தரப்பினரும் இதயசுத்தியுடன் ஒன்றிணைந்து சமாதானத்தீர்வுக்கு வாருங்கள் வடகிழக்கு யுத்தம் 20 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. உலகத்தில் நடந்த யுத்தங்கள் யாவும் பத்து வருடங்களுக்கு மேல் நீடிக்கவில்லை. அவற்றுக்குத் தீர்வுஏற்பட்டது. இருபது வருடங்களுக்கு மேலாக எமது நாட்டில் யுத்தம் நடைபெற்ற வண்ணமுள்ளது. ஆனால் இதுவரை எந்தத்தீர்வுகளும் எட்டப்படவில்லை. இந்த நாட்டில் இனப்பிரச்சினை ஒன்று உள்ளதென்பதை இப்பொழுது எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்தப்பிரச்சினைக்கு முடிவு காணுங்கள் இல்லையேல் இந்த நாட்டுப்பிரச்சினை இன்னும் ஐம்பது வருடத்திற்கு நீடித்துக்கொண்டு போகும். இதற்கு அரசியல் தீர்வு அவசியம். இதனால் பலம்வாய்ந்த பொருளாதாரத்தை நாட்டில் கட்டியெழுப்பலாம். இந்த யுத்தம் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையில் நடைபெறுவது அல்ல, முழு நாட்டிற்கும் இந்த யுத்தத்தால் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. ஆகவே சகலரும் ஒன்று சேர்ந்து இந்தக்கொடிய யுத்தத்தைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளுங்கள்.

## சந்திரிகா கூட்டணி அரசின் பதவிக்காலத்தில் 1100 ஐ.தே.க ஆதரவாளர்கள் பணி நீக்கம்

### -கொழும்பு மாவட்ட ஐ.தே.க.பா.உ. காமினி லொக்குகே

சந்திரிகாவின் கூட்டணி அரசு பதவிக்கு வந்து ஆறு மாதங்களில் ஐ.தே கட்சிக்கு ஆதரவான சுமார் ஆயிரத்து நூறு அரச ஊழியர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளாரென கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரென காமினிலொக்குகே தெரிவித்துள்ளார்.

இவர்களில் சுகாதாரத் திணைகளத்தைச் சேர்ந்த 337 பேரும், வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியக ஊழியர்கள் 162 பேரும், மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை ஊழியர் 56பேரும், இலங்கை வங்கியில் 136பேரும், தேசிய சேமிப்பு வங்கியைச் சேர்ந்தோர், ரூபவாகினி தொலைக்காட்சி சேவையைச் சேர்ந்தோர் என மேலும் பலரும் அடங்குவர். எதிர்க் கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகத்துறையினர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

மேற்படி ஊழியர்களின் வேலை வாய்ப்பை பறித்தமைக்கும் அரசியல் நோக்கங்களுக்காக இடமாற்றம் செய்யப்படுவதற்கும் எதிராக தமது தொழிற்சங்கங்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாராவது ஒருவரின் தவறை விசாரிப்பதற்கும், அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், ஐ.தே. கட்சி எதிர்ப்புத் தெரிவிக்காது எனக் கூறியஅவர், நிறுவனங்களின் விதிமுறைகளுக்கேற்ப இவை எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையாகும் எனக் கூறியுள்ளார்.

இதன் போது மக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்தது, நாட்டை முன்னேற்றுவோம் என்ற பிரசுரத்துக்காகவன்றி தேர்தல் மேடைகளில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்காகவே என்ன குருநாகல் மாவட்ட ஐ.தே.க. எம்பி இந்திக்க பண்டார கருத்துத் தெரிவித்தார்.

## சிறுமி மீது பாலியல் வல்லுறவு அவுஸ்திரேலிய பிரஜைக்கு தண்டனை

(செட்டிகுளம்)

ஏழு வயதுச் சிறுமியைப் பாலியல் பலாத்காரம் புரிந்ததாக அவுஸ்திரேலிய நாட்டின் குடியுரிமை பெற்ற இலங்கை பிரஜை ஒருவருக்கு வவுனியா நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது. மேற்படி நபர் அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு வந்து வவுனியாவில் தங்கியிருந்த சமயம் தனது வீட்டில் இருந்த 7 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் புரிந்ததாக வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. இது திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சந்தேக நபரின் குற்றம் நிரூபிக்கப்பட்டமையை யடுத்து அவருக்கு 6 மாத கால 5 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 25000ரூபா நட்டஈடு வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (21)

## பொலன்னறுவை கொலை தொடர்பாக நான்கு பொலிசார் இடைநிறுத்தம்

பொலன்னறுவையில் உள்ள விருந்தகம் ஒன்றின் முகாமையாளரின் மரணம் தொடர்பாக நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்ட விருந்தகத்துக்கு சென்று அங்கு விருந்தக முகாமையாளரிடமும் மதுபானத்தைக் கோரியதாகவும் அது கிடைக்காமல் போகவே அவரைத் தாக்கியதாகவும் முறையிடப்பட்டுள்ளது, இதனையடுத்து நான்கு பொலிசாரும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (32)

# ஆதவனின் அனுபவப் பகிர்வு

அன்பு வாசகர்களே....!

ஒரு அதிசயம் நடந்தது என்று சொன்னேன் அல்லவா...?

'வண்ணத்துப்பூச்சிப் பள்ளத்தாக்கு' அதன் அதிசயம் தான் அது.

அப்பாடா.... திரும்புமிடமெங்கும் வண்ணத்துப் பூச்சிகள்.

ஒரு மில்லியன்..... ம்கூம்.... இரண்டு மில்லியன் எப்படி எண்ணுவது? எப்படிக் கணக்கிடுவது....?

அவைதான் பறந்து கொண்டிருக்கின்றனவே...! மஞ்சள்..... வெள்ளை....ஊதா.... செவ்விளநீர்..... நீலம்.... கறுப்பு... குருத்துப் பச்சை..... எத்தனை வண்ணங்கள்....!

அதுசரி உலகில் எத்தனை நிறங்கள் உண்டு? நான் ஒரு தடவை சுவீடனில் ஒரு ஓவியனைச் சந்தித்தேன், அவன் கேட்ட கேள்விதான் இது?

'உலகில் எத்தனை நிறம் உண்டு....?' நான் திக்குமுக்காடினேன்.

ஒரு தடவை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் இதில் சிந்திக்க என்ன இருக்கு....? உண்மையில் உற்று உங்கள் புறவுலகைப் பாருங்கள், நிறங்களை... வர்ணங்களை... ஒரு வகைக்குள் அடக்க முடிகிறதா?

ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம்.

அந்த ஓவியன் சொன்னான்... இதுவரை 900 நிறங்கள் உலகில் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன. தான் ஒரு நிறத்தைக் கண்டு பிடிக்கும் ஆய்வு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகக் கூறினான் எனக்கு அதிசயமாகப்பட்டது.

" எங்கே நீ கண்டுபிடித்த நிறங்களைக் காட்டு பார்ப்போம்?" எனக் கேட்டேன்.

என்னை ஒரு அறைக்கு இட்டுச் சென்றான் அங்கே புத்தக அலுமாரிகள் போன்று பல அலுமாரிகள் இருந்தன.

சின்னச் சின்ன வெள்ளைப் போத்தல்களினுள் விதவிதமான வர்ணங்கள் இருந்தன.

அவன் அவற்றைத் தான் எவ்வாறு உருவாக்கினேன் என விளக்கமளித்தான்.

சிவப்பு + நீலம் = X எனக் கொண்டால்,

X+Y= Z.

இங்கே Y=பச்சை + நீலம்.

இனி $X_1,Y_1,Z_1$, இப்படியே... அது நீண்டு $X_2,Y_2,Z_2$,..... $X_3,Y_3,z_3$ எனப் புதிய புதிய நிறங்கள் உருவாக்க முடியும் என்றான்.

ஒரு வெள்ளைத்தாள் எடுத்து அதில் தனது போத்தல்களில் சேமித்துவைத்திருந்த ஒவ்வொரு வர்ணங்களிலும் தூரிகையைத் தோய்த்து, ஒரு புள்ளடி போட்டான், அந்தப் பெரிய வெள்ளைத்தாள் முழுவதும் வெவ்வேறு வர்ணங்களில் புள்ளடிகள் நிரம்பியிருந்தன. அப்படா இவ்வளவு நிறங்களா...? வியந்து போய அவனைப் பாராட்டினேன்.

இந்த மில்லியன் கணக்கான விதவித வண்ணத்துப் பூச்சிகளைப் பார்க்கையில் எனக்கு அந்த ஓவியன் நினைவுக்கு வந்தான். இயற்கை எவ்வளவு ரம்மியங்களை இந்த மனிதருக்காக.... அள்ளித் தெளித்திருக்கிறது. என்று பிரமித்துக் கொண்டிருந்தேன்.

இந்த உலகின் மனிதர்கள் கூட எத்தனை வகைகள்? எத்தனை முகங்கள்? ஒருவர் போல் ஒருவர் இல்லை. சனத்தொகை கூடிய இந்தியா முழுவதும் பயணித்தபோது இதை நான் வியந்தேன் சின்னச் சின்ன வேறுபாடுகளுடன் விதவிதமான மனிதர்கள்.

சரி அவர்கள் உடலில்தான் இவ்வளவு வேறுபாடுகள் என்றால் அவர்கள் குணங்களும் வேறுபட்டுள்ளன. இதுதான் வாழ்வின் இரகசியம்

ஒரு மனிதனைப்போல் இன்னொரு மனிதன் இல்லை.

ஒருவனின் கைரேகைபோல் மற்றொருவனின் கைரேகை இல்லை. விரல் அடையாளங்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசமானவை.

அமெரிக்கா தன் நாட்டில் வாழும் அத்தனை வெளிநாட்டினரதும் விரல் அடையாளங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று சென்ற வாரம் சட்டமியற்றியுள்ளது.

இந்த வண்ணத்துப் பூச்சிகள் எனக்கு வாழ்வின் பல பாடங்களைச் சொல்லித்தந்தன.

வேறுபாடுகளின் விதங்கள்....

வேறுபாடுகளிடையே ஒரு முழுமை.......

வேறுபாடுகளின் தனித்தன்மை......

வேறுபாடுகளின் இணக்கப்பாடு.........

வேறுபாடுகளின் ஐக்கியம்.............

இப்படியே சிந்தித்துக் கொண்டிருந்த எனக்கு நேரம் போனது தெரியவில்லை. திடீரென காவல் துறையின் 'விசில்' சத்தம் போல ஒரு 'விசில்' சத்தம் கேட்டது. சத்தங் கேட்ட திசை நோக்கித் திரும்பினேன். அங்கே அந்த 'வண்ணத்துப் பூச்சிப் பள்ளத்தாக்கின்' காவலாளி நின்று கொண்டிருந்தான். அவன் என்னைத் தன்னருகே வரும்படி கைகளால் சைகை செய்தான் அருகே சென்றேன் அவன் சொன்னான்.

"மன்னிக்க வேண்டும் sir இன்னும் 30 நிமிடத்தில் இந்த வட்டாரத்தில் ஒரு சத்தமும் கேட்கக் கூடாது. நீங்கள் வெளியேறி விடுங்கள் தயவு செய்து"

"ஏன்?" என்று கேட்டேன்.

" வண்ணத்துப் பூச்சிகள் இனப் பெருக்கம் செய்யவும் கூட்டுப் பூச்சிகள் அமைதியாக உறங்கவும் இந்த நேரம் அவைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது" என்றான் அவன்.

அவனைப் பிரமிப்புடன் பார்த்தேன் பிராணிகள் இனப் பெருக்கம் செய்யவும் அடைகாக்கவும் அமைதியான சூழலை ஏற்படுத்துகிறார்கள்.

நான் எமது நாடுகளை யோசித்துப் பார்த்தேன்.

இனப்பெருக்கத்திற்கு வேண்டாம் சும்மா நண்பர்கள் பேசுவதற்குக் கூட அமைதியான சூழல் இருக்கிறதா...?

* * * *

NAUSA தீவின் அழகைச் சுற்றிப் பார்த்து விட்டு மீண்டும் 'எதென்ஸ்' நகரை அடைந்தேன் மீண்டும் ஒரு தடவை அக்ரோபலிஸ் ஐப் பார்த்தேன் அதனுள் பொதிந்துகிடக்கிற தத்துவங்களும் நாடகங்களும் எத்தனை எத்தனையோ...?

* * * *

நாங்கள் சின்ன வயசாக இருக்கும் காலத்தில் 'சிவந்தமண்' என்றொரு திரைப்படம் வந்தது சிவாஜி நடித்த வெற்றிப் படம்.

அந்தப்படம் ஐரோப்பாவில் எடுக்கப்பட்டது. அந்தக் காலத்தில் ஐரோப்பாவை தமிழ்ப்படங்களினூடு பார்க்கும் வாய்ப்பை எனக்களித்த முதலாவது படம் அது தான்.

அதிலே ஒரு பாடல் வரும் 'ஒரு ராஜா ராணியிடம் வெகு நாளாக ஆசைகொண்டார்...' என்ற இந்தப் பாடலில் இடையில் ஒரு வரி...

'....அழகிய அல்ப்ஸ் மலையின் சிகரத்திலே...' என்று வரும்.

உலகிலேயே அழகான மலைகளில் 'அல்ப்ஸ்' மலையும் ஒன்று.

அந்த மலைச்சிகரங்களின் ஒரு பகுதியை அந்தப்பாடல் காட்சியில் காட்டியிருந்தார்கள்.

எனது 'ரீன்ஏஜ்' வயதில் அந்தப் பாடலும் அந்த மலைச்சிகரமும் என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது. அப்போதிருந்தே 'அல்ப்ஸ்' மலையை ஒரு தடவையாவது பார்க்க வேண்டும் எனும் ஆவல் என்னகத்தே எழுந்தது.

* * * *

தமிழ் நாடகக் கல்லூரி ஒன்றை சுவிற்ஸர்லாந்தில் ஆரம்பிக்கின்ற நோக்கத்திற்காக திரு. அன்ரன் பொன்ராஜா அவர்களின் அழைப்பை ஏற்று சுவிற்ஸர்லாந்து சென்றேன்.

சுவிற்ஸர்லாந்தை உலகத்தின் பூங்கா என்றழைப்பார்கள் மிகமிக அழகான நாடு அது அல்ப்ஸ்-பிலாத்தூஸ்-இன்ரலாகன் ஆகிய மூன்று மலைகளினதும் கணவாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. அத்துடன் ஜேர்மனி-பிரான்ஸ்-இத்தாலி ஆகிய நாடுகளின் எல்லைகளையும் அது கொண்டிருக்கிறது.

பசுமையும்... அழகிய மரங்களும்....ஆறுகளும்..... சிற்றருவிகளும்.... பணிமலை களும்..... பச்சைவயல் வெளிகளும் ..... அழகிய பூக்களு மாய்..... எழில் கொஞ்சும் நாடு சுவிற்ஸர்லாந்து. சுமார் 2வருடகாலம் சுவிற்ஸர்லாந்தில் வாழ்ந்தேன் வேலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் ஊர் சுற்றுவதுதான் என்வேலை. சுவிற்ஸர்லாந்து மிகவும் சிறிய நாடு, சுவிற்ஸர்லாந்தின் மூலைமுடுக்கெங்கும் வெகு இலகுவில் சொற்ப நாட்களில் சுற்றிவிடலாம்.

சுவிற்ஸர்லாந்து 'சொக்லேற்ஸ்' க்குப் பெயர்போன நாடு அதன் 'சொக்லேற்ஸ்' உலகப் புகழ் பெற்றது.

இந்தியாவில் பாண்டிச் சேரியில் வாழும் புகழ் பெற்ற குழந்தை நாடகக் கலைஞர் திரு. வேலுசரவணன் எனது நல்ல நண்பர் ஒரு தடவை சுவிற்ஸர்லாந்துக்கு வந்திருந்தார். அவருக்கு சுவிற்ஸர்லாந்தை சுற்றிக் காட்டும் பணி எனக்கு இடப்பட்டது. அவருடன் பயணம் செய்தது சுவாரஸ்யமானது.

ஒரு தடவை நல்ல வெய்யில் காலநிலையில் நானும் அவரும் Car இல் சென்று கொண்டிருந்தோம். சுவிற்ஸர்லாந்தின் தெற்குப் பக்கத்திலுள்ள கிராமங்களில் அக்கம் பக்கம் பச்சை வயல் வெளிகளுமாய்...

மலையடி வாரங்களில் சின்னச் சின்னத் தெருக்கள் வளைந்து வளைந்து செல்லும் அதில் Car ஐச் செலுத்துவது எனக்கு அபார ஆனந்தத்தை அளிக்கும் அவருடன் இலக்கியம் நாடகம் பற்றிப் பேசிய படியே Car ஐச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

திடீரென்று எமது கண்ணாடிக்கு நேர் எதிரே அந்தரத்தில் ஒரு மாடு குறுக்காகப் பறந்து சென்றது.

"மாடு பறக்கிறது...மாடு பறக்குது" என்று சரவணன் அலறினார்.

Car ஐ ஒரு ஓரத்தில் நிறுத்தினேன் அந்தக் காட்சியை அவர் வாயைப் பிளந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார்.

மாடு எப்படிப் பறக்கும் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன்.

மாடுகளை மேச்சலுக்காக மலையடிவாரத்தில் விட்டிருப்பார்கள். அந்தபகுதிப் புல்லை அவை மேய்ந்து முடிந்ததும் அவற்றைவேறு மேச்சல் நிலத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் மற்ற மேச்சல் நிலம் மலைக்கு அப்பால் அடுத்த அடி வாரத்தில் இருக்கும், மாடுகளை மலை உச்சியில் ஏற்றி அப்பால் ஓட்டிச் செல்ல முடியாது இதனால் சுவிஸ் விவசாயிகள் "ஹெலிகொப்டர்"களைப் பயன்படுத்துவர்கள் ஹெலிகொப்டரில் 'பெல்ட்களை இறக்கி அந்த மாடுகளில் பூட்டி அவற்றைப் அலாக்காகத் தூக்கி ஹெலிகொப்டரில் கொண்டு சென்று அக்கரையில் விடுவார்கள்.

## பாகம் 15

இதைப் பார்த்து விட்டுத் தான் சரவணன் கத்தியிருக்கிறாார். மாடு பறக்கிறது என்று அவர் பார்க்கும் பொழுது ஹெலிகொப்டரைக் காணவில்லை. தொங்கிக் கொண்டு போகும் மாட்டை மட்டுமே அவர் பார்த்திருக்கிறார்.

பின்னர் வந்து அவர் காரில் ஏறினார். நீண்ட நேரத்துக்குப் பின்னர் அவர் சொன்னார் ஹெலிகொப்டரில் போகும் வாய்ப்பு மாட்டுக்குக் கிடைத்திருக்கிறது மனிதர்களாகிய எமக்குக் கிடைக்கவில்லையே என்று.

அவருடைய இந்த வார்த்தைகளிலிருந்து மூன்றாம் உலக நாடுகளின் ஏழ்மை வெளிப்பட்டது. நானும் பெருமூச்சு விட்டபடியே Car ஐச் செலுத்தினேன்.

சுவிற்ஸர்லாந்தின் தெற்குக் கிராமங்களை சுற்றிப் பார்த்த அனுபவம் மிகவும் ரம்மியமானது. மாலை நேரங்களில் மலை முகடுகளில் சூரியன் பொற் கதிர்கள் பட்டுத் தெறித்து பச்சை வயல் வெளிகளில் விழும்பச்சையும் ஒரு செம்மஞ்சள் நிறமும் கலந்து அந்த மலையடிவாரம் காட்சியளிக்கும். பிலாத்தூஸ் மலையடிவாரங்களில் இந்த மாலை வேளைகளில் நான் அடிக்கடி பயணம் செய்திருக்கிறேன்.இந்தக் கணங்கள் எங்கோ தொலைந்து விட்ட .... வரண்டு விட்டிருந்த காதல் நினைவுகளை மீண்டும் துளிர்க்கச் செய்யும் கணங்கள்.

'யொம்புறா' என்றால் ஜேர்மன் மொழியில் கன்னி என்று அர்த்தம். சுவிற்ஸர்லாந்தில் உள்ள "இன்ரலாக்கன்" மலைத் தொடர்களில் "யொம்புறா மலைமுகடு இருக்கிறது இதற்கு ஏன் கன்னி மலை என்று பெயர் வைத்தார்கள் என்றால் இந்த மலை உச்சியில் எப்பொழுதுமே பனிகொட்டிக்கொண்டு இருக்கும் இந்தப் பனிச்சிகரம் ஒரு பொழுதும் உருகியதில்லை இதனால் தான் இதனை கன்னிமலை என்று அழைக்கின்றனர்.இந்தக் கன்னி மலையில் நான் பெற்ற அனுபவங்களை அடுத்த வாரம் பார்ப்போமா?.

---

## வவுனியா சாலம்பைக் குளம் பகுதியில் துப்பாக்கியால் சுட்டு இளைஞர் தற்கொலை

வவுனியா சாலம்பைக்குளம் பகுதியில் துப்பாக்கியால்சுட்டு இளைஞர் ஒருவர் தற்கொலை புரிந்துள்ளார்.நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஜெயசிங்கம் ஜெயகாந்தன் என்ற மேற்படி இளைஞனின் மனைவி வெளிநாட்டில் இருப்பதாகவும், மனைவி பணம் அனுப்புகின்ற போது ஒவ்வொருநாளும் குடித்து விட்டு வீட்டுக்கு வந்து தாயாருடன் தகராறு புரிவதாகவும் சம்பவ தினத்தன்று அவ்வாறு குடித்து விட்டு வீட்டுக்கு வந்த இளைஞனுக்கு தாயார் ஏசியுள்ளார். ஆத்திரம் அடைந்த இளைஞன் வீட்டில் இருந்த இடியன் துப்பாக்கியை எடுத்து தனக்குத் தானே வெடி வைத்துள்ளார். இதன் காரணமாகவே அவர் இறந்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தற்கொலை என்று ஆரம்ப விசாரணை மூலம் தெரியவந்த போதும் இடியன் துப்பாக்கியை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மாவட்ட நீதவான் பொலிசாருக்கு உத்தர விட்டுள்ளார். (21)

## துறைமுக சேவை ஊர்திகள் சேவைப் புறக்கணிப்பு

கொழும்பு துறைமுகத்தில் இலங்கை தொழில் ரீதியான போக்குவரத்து நலன்புரிச் சங்கம் இரண்டாவது நாளாக தனது சேவைப் புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளது. துறைமுகப்பகுதியில் ஏற்றியிறக்க்ல் சேவையில் ஈடுபட்டுள்ள 1500 வரையிலான பார ஊர்திகள் உள்ளட்ட கொள்கலன் ஊர்திகள் இந்த சேவைப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன. டீசலின் விலையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பைக் கருத்திற் கொண்டு தமது ஏற்றி இறக்கும் சேவைக்கான கூலியை 7 ஆயிரமாக உயர்த்துமாறு இந்தச் சங்கம் கோரியுள்ளது. இதன் காரண மாக கொழும்பு துறை முகத்தின் ஏற்றியிறக்கல் பணிகள் ஸ்தம்பி தமடைந்து வருகின்றன. (32)

### மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
### வடக்கு கிழக்கு மாகாண சபை
### போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டம் (CAARP)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
கடன் இலக்கம் - 2043 - ஸ்ரீ (எஸ்.எவ்)

## மன்னார் மாவட்டம்

# கேள்வி அறிவித்தல்

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட புனர்வாழ்வு கருத்திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (எஸ்.எவ்) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார்வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின்கருத்திட்டப்பணிப்பாளர்சார்பாக மன்னார் மாவட்ட கேள்விச்சபையின் தலைவர் பின்வரும் ஒப்பந்தவேலைகளுக்கு தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளை தற்போது கோருகின்றார்.

அட்டவணை

| இல | ஒப்பந்த இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | MN/CAARP/ED/06 | மன்/புனித லோறன்ஸ் றோ.க.த.க. பாடசாலையில்110'x25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் ஒன்றினை அமைத்தல் | M7 கட்டட நிர்மாணம் | 42,000 |
| 02. | MN/CAARP/ED/11 | மன்/தேவன்பிட்டி றோ.க.த.க. பாடசாலையில் 110'x25'வகுப்பறைக்கட்டடம் ஒன்றினைபுனரமைத்தல் | M8 கட்டட நிர்மாணம் | 19,000 |
| 03. | MN/CAARP/ED/12 | மன்/வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலையில் 110'x25'வகுப்பறைக்கட்டடம்ஒன்றினை புனரமைத்தல் | M8 கட்டட நிர்மாணம் | 19,000 |
| 04. | MN/CAARP/ED/13 | மன்/மருக்கரைநானட்டன் அ.த.க.பாடசாலையில்110'x25' வகுப்பறைக் கட்டடம் ஒன்றினை அமைத்தல் | M8 கட்டட நிர்மாணம் | 18,000 |
| 05. | MN/CAARP/ED/14 | மன்/எருக்கலம்பிட்டி மகளீர்முஸ்லிம் பாடசாலையில்70'x25' இரண்டு மாடி கட்டடம் ஒன்றினை அமைத்தலும் மற்றும் நூல்நிலையம், விஞ்ஞானஆய்வுகூடம், கணினிஆகியவற்றிற்கான வசதியும் வழங்கல் | M7 கட்டட நிர்மாணம் | 41,000 |
| 06. | MN/CAARP/RD/01 | பள்ளமடு-விடத்தல்தீவு வீதியை தாரிட்டுப் புனரமைத்தல் | M6 வீதி நிர்மாணம் | 52,000 |
| 07. | MN/CAARP/RD/02 | கல்பதித்து தாருற்றுதல் உயிலங்குளம், ஆள்காட்டிவெளிவீதி (1..75கி.மீ) | M7 வீதி நிர்மாணம் | 47,000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ள சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலைகோரலாம்

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட துறைசார் தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல்வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (" ICTAD"இல் மேற்படி M7க்கு மேலான பதிவு பெற்றவர்களுக்கு மட்டும்) இருக்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்டவேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும், இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் /அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதாரப்படுத்தப்படல்வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.

IV இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப்பெறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றல் அளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகள், அல்லது திருப்திகரமற்ற வேலைகள்என்னும்காரணங்களுக்காக தகுதியற்றவர் என பிரகடனப்படுத்தப்பட்டவர்.

VI. கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் நாளது தேதிவரை புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. இதன்தொடர்பாக பந்தி 2ல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கூறுலையிட முடியும் ஒவ்வொரு ஒப்பந்தவிடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமையவேண்டும்.ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித்திட்டத்தின் (NECORD) கீழ் தற்பொழுது செயற்படுத்திக்கொண்டிருக்கும் ஒப்பந்தவேலைகள் உட்படமூன்றாக இருக்கும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவல்களை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித்திட்டம் NECORD,மன்னார் அலுவலகத்தில் வேலைநேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி சம்பந்தமான ஆவணங்களையும் பரிசீலனைசெய்யலாம். தொலைபேசி -023- 223103, தொலைநகல்: 023-2233103, ஈமெயில்: distmnr@sltnet.lk.

06. கேள்வி ஆவணங்களை 07.10.2004இலிருந்து 22.10.2004வரைகாலை 9.30லிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்துஒவ்வொரு கேள்விப்பத்திரங்களுக்கும் ரூபா 1000/= ஐ மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

07. முன்கூட்டிய கேள்விக்கூட்டமொன்று 25.10.2004 காலை 10.00மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

08. கேள்விகோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாக சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்வி விலையையும் கேள்வி விலைகொண்டிருக்கவேண்டும் என்பதுடன், பந்தி 9ல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

09. பொறிவைத்தகேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, மாவட்டத்திட்ட அலுவலகம், கச்சேரி மன்னார் என்ற விலாசத்திற்கு 01.11.2004 மாலை 2.00மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

10. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்

**வே.விசுவலிங்கம்,**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை அரசாங்க அதிபர்,**
**NECORD திட்டம் மன்னார்.**

(சி-10562)

## நாடு தற்போது கழுமரத்திலாம்

(கொழும்பு)

நாட்டு மக்கள் தற்போது எரிந்து கொண்டிருக்கும் தளத்தின் மீது உள்ளார்கள் என ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ருக்மன் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் ருவான் வெல்லவில் நடைபெற்ற கட்சிக்கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது கழுமரத்தில் நிற்கின்றது ஒவ்வொரு காரியமும் நாசமாகின்றன. முன்னணி அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளும் அதன் சாமர்த்தியமற்ற முகாமையும் நாட்டை ஒருசூன்ய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன.

இந்த துக்ககரமான விடயங்களுக்குப் பொறுப்பாளரான ஜே.வி.பி.தற்போது அதில் அக்கறையுள்ளது போன்று பாசாங்கு காட்டுகின்றதென்றும் ருக்மன் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

## போலியான நோட்டுக்களுடன் எட்டுப்பேர் கைது

எண்பத்தி மூன்று போலி ஆயிரம் ரூபா நோட்டுடன் 8 நபர்களை கம்பஹா பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை போலி ஆயிரம் ரூபா நோட்டொன்றை மாற்றுவதற்கு முயற்சித்த நபர் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்த பொலிசார் அவரிடம் விசாரணை நடத்தியதைத் தொடர்ந்து மற்றைய ஏழு நபர்களும் 82 போலி ஆயிரம் ரூபா நோட்டுகளுடன் கைது செய்யப்பட்டனர்.

இந்த நோட்டுகள் குளியாப்பிட்டிய பகுதியில் அச்சிடப்பட்டவை என்றும், குறித்த இடத்தை முற்றுகையிட்டு கணினி உட்பட போலி பண நோட்டு அச்சடிக்கும் வேறு உபகரணம் ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கைதான நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இரு முஸ்லிம்கள் சுட்டுக்கொலை

பொலன்னறுவை மாவட்டம் வெலிக்கந்த பிரதேசத்தில் ஆசிரியர் ஒருவர் உட்பட இரண்டு முஸ்லிம்கள் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் கட்டுவன்வில்லையைச் சேர்ந்த ஆசிரியர் கே.எம்.குத்தூஸ் (வயது 47) மற்றும் என்.எம்.சேகு மொகமது (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். சம்பவதினம் இரவு இவர்கள் அத்துகல கிராமத்திலுள்ள தமது உறவினர்களின் வீட்டிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இச் சம்பவத்தையடுத்து அப்பிரதேசத்தில் தற்பேர்து பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. வெலிக்கந்தை பொலிசார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை இரவு பொலன்னறுவை முஸ்லிம் கொலனியில் ஒருவர் சுடப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கே.ரஞ்சன் (வயது 38) என்ற இந் நபர் தொழில் புரியும் தனியார் அரிசி ஆலைக்குள் பிரவேசித்த இனந்தெரியாத ஆயுதபாணிகள் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள்.

# அறிவித்தல்

## தேசிய வாசிப்பு மாதம்-ஒக்டோபர் 2004ஐ முன்னிட்டு கட்டுரைப்போட்டி

கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சியால் மேற்படி வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைச்சி, கண்டாவளை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கட்டுரைப்போட்டி நடாத்தப்பட்டு, முதன் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுவதுடன் மூன்று ஆறுதல் பரிசில்களும் இறுதிநாள் விழாவில் வழங்கப்படவுள்ளன. இப்போட்டியில் கலந்துகொள்வதற்கான விதிகள் வருமாறு:-

**தகைமைகள்:-** *கரைச்சி, கண்டாவளை பிரதேசசபை எல்லைக் குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த. (சா.த.)*
*அல்லது*
*க.பொ.த.(உ.த.) கற்பவராக இருக்க வேண்டும்.*

**கட்டுரைத்தலைப்பு:-** *(1) வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.*
*அல்லது*
*(2) மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் நூலகங்களின் பங்களிப்பு.*

கட்டுரைகள் யாவும் 400 சொற்களுக்குக் குறையாமலும், 500 சொற்களுக்கு மேற்படாமலும் ஒருதாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு கட்டுரை மாத்திரமே சமர்ப்பிக்கலாம்.

**முடிவுத்திகதி:-** கட்டுரைகள் யாவும் மாணவரின் சுயஆக்கம் என்பதனைப் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு "விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு உறையின் இடதுபக்க மேல் மூலையில் கட்டுரைப்போட்டி 2004" எனக் குறிப்பிட்டு 20.10.2004ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக நேரிலோ, பதிவுத் தபால் மூலமோ அனுப்பப்படல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் இரத்துச்செய்யப்படும்.

**நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும், முடிவானதுமாகும்.**

*பொன்.நித்தியானந்தம்,*
*விசேட ஆணையாளர்,*
*கரைச்சிப்பிரதேசசபை,*
*கிளிநொச்சி.*

(சி-10252)

# மண் அரண்களை அகற்றக் கோரல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, திருவையாறு, இரத்தினபுரம் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் முன்னர் அமைத்த மண் அரண்கள், நகர்வரண்கள், காப்பரண்கள் என்பன விவசாய நடவடிக்கைகளிற்கு பெரும் இடையூறாக இருப்பதாக இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.இவற்றை அகற்றி தமது விவசாய செயற்பாடுகளுக்கு உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களை மக்களும், விவசாயிகளும் கேட்டுக் கொண்டுள்ளனர். (15)

# பணிநிலை வெற்றிடம்

*கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி. பணிநிலை வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்.*

01. பதவி : சாரதி
02. சம்பள குறியீட்டு இலக்கம்: 312/15
03. சம்பள அளவுத்திட்டம் : (3500 +1250) 4750-65x10-70x10 = 6100/=
04. வயதெல்லை : 21-45
05. தகைமைகள் : ஐந்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழுடன் பஸ் அல்லது லொறி அல்லது நான்கு சில்லு உழவு இயந்திரம் பெட்டியுடனான சாரதி அனுமதிப் பத்திரத்துடன் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 15.10.2004 ஆம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ, நேரடியாகவோ தலைவர், கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

(சி.10249)



-வரவு-செலவுத்திட்டத்தில் சம்பள அதிகரிப்புக்கு முன்-

# பொருட்களின் விலை அதிகரிப்பிற்கேற்ப கொடுப்பனவை வழங்குக

## அரசதுறை தொழிற்சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தில் சம்பளத்தை அதிகரிப்பதற்கு முன்னதாக தற்போது அதிகரித்துள்ள பொருட்களின் விலைகளுக்கு ஏற்புடைய கொடுப்பனவை வழங்குமாறு அரசதுறை தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அரச நிர்வாக அமைச்சு முன்பாக அரசதுறை தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போதே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை அரசதுறையில் சம்பள முரண்பாடுகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை எனவும், இந்த அரசு பதவிக்கு வந்த போது கூறிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லையெனவும் அந்த ஆர்ப்பாட்டத்தின் போது கூறபட்டது.

இதேவேளை விலைவாசி அதிகரிப்பு , பஸ்கட்டண அதிகரிப்பு என எல்லாமே அதிகரிக்கின்றன. ஆனால் இந்த அரசும் தமது சம்பளத்தை அதிகரிக்கும் என்ற நம்பிக்கை தமக்குக் கிடையாதெனவும் அந்த ஆர்ப்பாட்டத்தின் போது கூறப்பட்டுள்ளது.

## பிக்கு மேன்முறையீடு

பௌத்த துறவிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில்லை என்ற மோட்டார் திணைக்கள ஆணையாளரின் தீர்மாணத்தை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாக்கியமுனி பரகோட விமல் வன்ச என்ற பௌத்த பிக்குவே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். பௌத்த சாசன சபையின் தீர்மானத்தின்படி மோட்டார் திணைக்கள ஆணையாளர் மேற்கொண்ட தீர்மானம் பிழையானது எனவும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# அமைய நிரற்படுத்தும் எழுதுனர் (Temporary Casual Coding Clerk) பதவிக்கான விண்ணப்பம் கோரல்.

**சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம், கச்சேரி, முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ்க்காணும் 5 பிரதேச செயலர் பிரிவுகளுக்குமான மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

**இப்பதவிக்கான தகைமைகள்:-**

1. விண்ணப்பதாரர் முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருத்தல் வெண்டும்.
2. க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி. இவற்றுள் கணிதம் அல்லது அதற்குப் பொருளியல் பாடத்தில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:-**

15.10.2004 அன்று அல்லது அதற்குப் முன்னர் கிடைக்கக்கூடியதாக அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்குத் தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை கல்விச் சான்றிதழ், மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

| பிரதேச செயலகம் | வெற்றிடம் |
|---|---|
| 1. புதுக்குடியிருப்பு | 01 |
| 2. கரைதுறைப்பற்று | 01 |
| 3. மாந்தை கிழக்கு | 01 |
| 4. துணுக்காய் | 01 |
| 5. ஒட்டுசுட்டான் | 01 |

திருமதி இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.10561)

# நெஸ்பிறே அதிகூடிய பால் வழங்கும் பரிசுகளை வென்றுள்ளவர்களின் பெயர் விபரம்

**1ஆம் பரிசு**
ச. இளங்கோ 12ஆம் கட்டை விசுவமடு

**2ஆம் பரிசு**
ஜெயராசா துக்ஷ்யந்தன் ஜெயதேவி ஸ்ரோர்ஸ் றெட்பானா.

**3ஆம் பரிசு**
சின்னையா சிவகுமார், 3ஆம் திட்டம் தேராவில்.

**4ஆம் பரிசு**
கு. வளர்மதி 58/2 விசுவமடு.

**5ஆம் பரிசு**
வசந்தி 1ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.

**6ஆம் பரிசு**
இ. கிந்துயன் 12ஆம் கட்டை விசுவமடு

பரிசுகளை வென்றுள்ளவர்கள் தங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள அம்மன் களஞ்சியத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(5152)

# தற்காலிக கடைகள் அமைப்பதற்கான அனுமதி

கிளிநொச்சி நகரில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகள், கோவில் திருவிழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகளில் தற்காலிகக் கடைகள் அமைத்து நடாத்த விரும்புவோர் பிரதேசசபையின் முன் அனுமதிக்காக விண்ணப்பித்து அனுமதி பெற்ற பின்னரே அவ்வாறான கடைகளைஅமைக்க முடியும். அதற்கான இடங்கள் எமது சபையினாலேயே வழங்கப்படும்.

எனவே அவ்வாறு தற்காலிக கடைகள் அமைக்க விரும்புவோர் கரைச்சிப் பிரதேசசபையுடன் உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம். 2285761.

**குறிப்பு:-** இக்கடைகளில் சொப்பிங் பாய்க் (Shoping Bag) பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

பொன்.நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.10259)

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

**University of Jaffna Will Cntertain applications From suitably qualifled Persons For the Under mentoned Posts.**

## FACULTY OF AGRICULTURE

**Professor in Agronomy/ Agricultural Economics Agricultural Biology**

| POST | SALARYSCALE |
|---|---|
| Professor | RS. 28050- 8x 605 32890 p.m |

**In addition tothe above Salary an academic allowance of 30% of salary and other allowance approved by the University Grants Commission Will also be Paid.**

## FACULTY OF GRADUATES STUDIES

(1) Visiting Lecturer in Education JAFFNA and Vavuniya centres
qualifications.
(a) A First or Secound Class Degree or postgauduate or Professional gualifications of a recognized University in the relevant field and
(b) Not less than Five (05) years experience in the relevant field

**Rate of Payment: RS 750/= Per hour**
* The Person should be able to take lectures in English and Tamil Medium

(II) Visiting Instructor in Computer Science
qualifications.
(a) BSc Special degree in Computer Science from a recognized University
Or
(b) BSc gencral degree With Computer Seience as a Subject from recognized University
And
One year experience in the field of computing
Rate of Payment: RS 250/= Per hour
The closing date for entertaining applications
i. Professors -31.12.2004.
iii Others- 05.11.2004

Application Froms and other details may be obtained from the office of the Assistance Ragistrar Establishments, University of Jaffna Sri Lanka, either in Person or by sending a money order for RS 20/= Per From Those Who Wish to obtain application froms by post are reguested to send a money order/ postal order drown in favour of the **Bursar University of Jaffna** together With a self addressed stamped envelope 23x10 cm in size.

Those Who Wish to apply for more than one post should apply in separate Forms fo each post

Applications from the University System/ Government Departments/ Corporations and Statery Boards Should Channel Their Application Through The Head of Respective Institution.

Applications received after the closing date Will be rejected Without information

**REGISTAR**
**University of Jaffna**
**Srilanka.**
*2004-10-04*

(சி.10257)

# வடகிழக்கு கட்டுமான தொழில்நுட்ப நிறுவனம்

## வேலை வாய்ப்பு

**1. கனரக வாகன இயக்குனர்கள (Heavy Machinery Operators)**

| | | |
|---|---|---|
| 1.Track type Tractor D4,D5 | (டோசர்) | (கற்றப்பில்லர் வகை) |
| 2.Backhoe Loader | (பைக்கோ லோடர்) | (கற்றப்பில்லர் வகை) |
| 3.Motor Grader (120 H) | (மொட்டோ கிறேடர்) | (கற்றப்பில்லர் வகை) |
| 4. Hydraulic Excavator | (எக்ஸ்கவேற்றர்) | (கற்றப்பில்லர் வகை) |
| 5.Vibrator Roller | (வைபிறெற்றர் றோளர்) | (காம் வகை) |

**2. கனரக வாகன இயக்குனர் உதவியாளர்**

மேற்படி பதவிகளுக்கு ஆற்றலும், அனுபவமும் உள்ளவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு 2004.10.12/13 ஆம் திகதிகளில் காலை 10.00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

*சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்*

**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-**

வடகிழக்கு கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
NORTH EAST CONSTRUCTION AND TECHNICAL ORGANIZATION
(NECTEC)
கண்டிவீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி (கிளி/மத்தியகல்லூரிக்கு அருகாமையில்)
T.P.No: 021 2285917

(5153)

# கடற்புலி லெப். கேணல் நிரோஜனின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாளில்

ஆழக் கடல் நீளம் பகையோடாடி -தமிழ்
ஈழ விடுதலைக்காய் பலம் அள்ளி வருகையில்
எம்.ரி. ஸொய்ஸின்
எம்.ரி. கொய்
ஆகிய கப்பல்களில் வீரச்சாவடைந்த
கடற்கரும்புலிகள், கடற்புலிகளின் நினைவாக உருவாக்கப்பட்டுள்ள

## அலை பாடும் பரணி
(பாடல் இசைத் தட்டு)

# வெளியீட்டு விழா

முல்லைத்தீவு ம.வி. மைதானத்தில்
07.10.2004 (வியாழன்) முன்னிரவு 7.00 மணிக்கு

இசை - இசைப்பிரியன்
வெளியீடு - விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்.
ஒலிப்பதிவு - மலையவன்
உருவாக்கம் :- தர்மேந்திரா கலையகம், நிதர்சனம்

இசைப்பிரியனின் நெறியாள்கையில்
தமிழீழ இசைக் கலைஞர்களும்
தமிழீழத்தின் தலைசிறந்த பாடகர்களும் இணைந்து வழங்கும்.

தமிழீழ இசைக்குழுவின்
## "இன்னிசை கானங்கள்"

எஸ்.ஜி. சாந்தன்
ஜெயா சுகுமார்
திருமலைச் சந்திரன்
நிரோஜன்

வசிகரன்
யுவராஜ்
இசையரசன்
சந்திரமோகன்

சீலன்
மேரி
சாகித்தியா
மணிமொழி

எம்.ரி. ஸொய்ஸின்
எம்.ரி. கொய்

**தமிழீழ மக்கள் அனைவரையும் ஓயாத அலைகள் ஒன்றின் மண்ணுக்கு அன்புடன் அழைக்கின்றோம். கடற்புலிகளும், நீதர்சனமும்.**



விளம்பர அனுசரணை:

# தமிழரசி நகைமாடம்
புதுக்குடியிருப்பு.

**தங்க நகை எதுவானாலும் எங்களிடம் வாருங்கள்**

- தமிழ்நிலா நகைமாடம் மல்லாவி.
- அழகு நிலா நகைமாடம் தண்ணீரூற்று.
- தமிழ்மதி நகைமாடம் உடையார்கட்டு.
- தமிழரசி நகைமாடம் கந்தபுரம்.
- தமிழ்மதி நகைமாடம் விசுவமடு.
- யாழரசி நகைமாடம் முழங்காவில்.
- தமிழரசி நகைமாடம் கிளிநொச்சி.
- தமிழ்மதி நகைமாடம் புதுக்குடியிருப்பு.
- வான்மதி நகைமாடம் புதுக்குடியிருப்பு.

சுடர் மாணிக்கக்கல் வாணிபம்
**புதுக்குடியிருப்பு.**
சுடர் மாணிக்கக்கல் வாணிபம்
**கிளிநொச்சி.**

(சி-10566)

- 'பாக்டெல்' முக்கோணத் தொடர் -

# யுகானா, மாலிக் நிதானமான துடுப்பாட்டம் பாகிஸ்தானுக்கு மூன்றாவது வெற்றி



பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் பாக்டெல் முக்கோண கிரிக்கெட் தொடரின் மூன்றாவது போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று கராச்சியில் நடைபெற்ற சிறிலங்கா அணிக்கு எதிரான முதலாவது போட்டியில் பாகிஸ்தான் 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜெயசூரியா 53 ஓட்டங்களையும், அத்தப்பத்து 46 ஓட்டங்களையும், சங்கக்கார 38 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் சொஹைப் மாலிக் 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், முகமட் சமி 41 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்



பற்றினர்.

பதிலுக்கு 233 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் புகுந்த பாகிஸ்தான் 33 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடிக்கு உள்ளானது போதும்.

மூன்றாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த யுகானா, மாலிக் மிகச் சிறப்பாகவும், நிதானமாகவும், அதிரடியாகவும் ஆடி 48.4 ஓவர் நிறைவில் மூன்றாவது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத 200 ஓட்டங்களை பெற்று வெற்றிக்கு வழிவகுத்தனர்.

துடுப்பாட்டத்தில் யுகானா ஆட்டமிழக்காது 107 ஓட்டங்களையும், மாலிக் 86 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் வாஸ், சொய்சா தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக மாலிக் தெரிவானார்.

இதன் மூலம் நடந்து முடிந்த மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டிய பாகிஸ்தான் 16 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும் ஒரு போட்டியில் விளையாடி தோல்வியைச் சந்தித்த சிறிலங்கா இரண்டாம் இடத்திலும், மூன்றாவதாக இரண்டு போட்டியிலும் பாகிஸ்தானிடம் தோல்வி அடைந்த சிம்பாப்வே உள்ளது.

## தலைவராக இன்சமாம் நீடிப்பார்




பாகிஸ்தான் அணியின் தலைவராக இன்சமாம் உல்ஹக் தொடர்ந்து பணியாற்றுவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சஹாரியார்ஹான் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியிலும் அவரே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

35வயதான இன்சமாம் உல்ஹக் சனவரி மாதம் அணித்தலைவராக நியமிக்கப்பட்டு தொடர்ந்து ஒரு வருடத்துக்கு அவர் அணித் தலைவராக இருப்பார் என தெரிவிக்கப் பட்டது. இருந்தாலும் 1993ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடிக்கடி மாறிக்கொண்டிருந்த அணித்தலைவர்களில் பத்தாவது நபராக நியமிக்கப்பட்ட இன்சமாம் சிறப்பாக அணியை வழி நடத்தி வருவதால் தொடர்ந்தும் அவரே அடுத்து வரும் தொடர்களுக்கும் அணித் தலைவராக இருப்பார் என பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

பெங்களூர் டெஸ்ட் போட்டி


# ஹட்ரிச், கிளார்க் சிறப்புத் துடுப்பாட்டம் அவுஸ்திரேலியா வலுவான நிலையில்



அவுஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று பெங்களூரில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.

நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவின் போது அவுஸ்திரேலியா 5 விக்கெட்டுக்களை இழந்து 316 ஓட்டங்களைப்பெற்று பலம் வாய்ந்த நிலையில் உள்ளது.



இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடாதபோதும் ஹட்ரிச், கிளார்க் ஆகியோரின் சிறப்பு துடுப்பாட்டம் அணிக்கு ஸ்திர நிலையை ஏற்படுத்தியது.

துடுப்பாட்டத்தில் லாங்கர் 52 ஓட்டங்களையும், ஹெய்டன் 26 ஓட்டங்களையும், ஹட்ரிச் 81 ஓட்டங்களையும், கிளார்க் ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களையும், கில்கிறிஸ்ட் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கும்ளே 86 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன்சிங் 105 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், பதான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



## 400 விக்கெட் என்ற மைல்கல்லை எட்டினார் அனில் கும்ளே

நேற்று பெங்களூரில் ஆரம்பமான அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே 400 விக்கெட்டுக்கள் என்ற மைல் கல்லை எட்டினார்.

33 வயதான கும்ளே அவுஸ்திரேலிய வீரா ஹட்ரிச்சின் விகெட்டை வீழ்த்தியதன் மூலம் இச் சாதனைக் குரியவரானார்.

இதன் மூலம் 400 விக்கெட்டை எட்டிய சுழற்பந்து வீச்சாளர்களில் மூன்றாவது வீரராக அனில் கும்ளே உருவாகியுள்ளார்.

அத்துடன் 400 விக்கெட்டை எட்டிய இரண்டாவது இந்தியர் என்ற பெருமையையும் பெற்றார்.

முதல் இடத்தில் கபில்தேவ் 434 விக்கெட்டை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னணியில் முரளி 532, ஷேன் வோர்ன் இரண்டாம் இடம் 527, வோல்ஸ் 519, கிளென் மெக்ராத் 440, கபில்தேவ் 434, ரிச்சட்ஸ் ஹட்லி 431, வசீம் அக்ரம் 414, ஹேட்லி அம்புறூஸ் 405, அனில் கும்ளே 400 ஆகியோர் முறையே 400இற்கு மேற்பட்ட விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ள அதேவேளை, முன்னாள் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் இயன் பொத்தம் 383 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 10ஆம் இடத்தில் உள்ளார்.

# ஒருநாள், டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை அவுஸ்திரேலிய அணி முதலிடத்தில்




ஐ.சி.சி. சம்பியன் டிராபி கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் சமீபத்தில் நடந்தது. இதன் அடிப்படையில் நாடுகளின் வரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது. அதன்படி 5 ஆவது இடத்தில் இருந்த இந்தியா 102 புள்ளிகள் பெற்று 7 ஆவது இடத்துக்குப் பின்தங்கியுள்ளது. அந்தப் போட்டியில் மோசமாக ஆடியதால் இந்த நிலைமை ஏற்பட்டது.


அவுஸ்திரேலியா 137 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இலங்கை 121 புள்ளிகள் பெற்று 2ஆவது இடத்திலும் நியூசிலாந்து 116 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன.

ஐ.சி.சி. கோப்பையை வென்ற மேற்கிந்தியத்தீவு 107 புள்ளிகள் பெற்று 4ஆவது இடத்திலும், இங்கிலாந்து 5ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 6ஆவது இடத்திலும், தென்னாபிரிக்கா 8ஆவது இடத்திலும், சிம்பாவே 9ஆவது இடத்திலும், கென்யா 10ஆவது இடத்திலும், பங்களாதேஷ் கடைசி இடத்திலும் உள்ளன.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் நாடுகளின் வரிசைப் பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது. அதன்படி இந்தியா 4ஆவது இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா முதலிடத்திலும், இங்கிலாந்து இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றினால் இரண்டாவது இடம் கிடைக்கும்.

## இங்கிலாந்தின் லங்கா ஷயர் அணியில் முத்தையா முரளிதரன் ஒப்பந்தம்



அடுத்த ஆண்டின் முதல் 6 மாதகாலத்துக்கு இங்கிலாந்தின் லங்காஷயர் கழகம் முத்தையா முரளிதரனை போட்டிகளில் இணைத்துக் கொள்ள ஒப்பந்தம் செய்துள்ளது.

முரளி கடந்த 1999 ஆம் ஆண்டிலும் 2001 ஆம் ஆண்டிலும் ரெட்றோஸ் கழகத்துக்காக விளையாடியுள்ளார்.532 டெஸ்ட் விக் கெட்டுக்களை கைப்பற்றியுள்ள முரளிதரன் தோள்மூட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக தற்போது போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்.

மீண்டும் தனது கழகத்துக்காக முரளி ஆடுவது பெருமையளிப்பதாக கழக முகாமையாளர் மைக்வட்கின்சன் தெரிவித்துள்ளார்.

முரளி முன்பு ஆடிய இரு கழகப் போட்டிகளில் 116 விக்கெட்டுக்களைப் பெற்றார். இவரது வருகையோடு மேற்கிந்திய அணித் தலைவரின் சாதனை முறியடிக்கப்படும் என கூறப்படுகின்றது.




அலன் போடர், காவஸ்கர் ஆகியோரிடமிருந்து டெஸ்ட் தொடர் கிண்ணத்தைப் பெறும் இந்திய அணித்தலைவர் கங்குலி.

## அதிரடி வீரர்களை வீழ்த்துவது சுலபம் அவுஸ். பந்துவீச்சாளர் கிளென் மெக்ராத்




நான் நினைத்தது போலவே, சுழற்பந்து வீச்சுக்குத் சாதகமான ஆடுகளம்! வேகப்பந்து வீச்சாளர்கள் இங்கு முழுத் திறமையையும் காட்டினால்தான் முடியும் என கிளென் மெக்ராத் தெரிவித்தார். எங்கள் அணியைப் பொறுத்த வரை கிளெஸ்பி, காஸ்ப்ரோவிச் பிரமாதமாகப் பந்து வீசுகிறார்கள். இந்தத் தொடரில் நாங்கள் மூன்றுபேரும் முழுத் திறமையையும் வெளிப்படுத்தும் பட்சத்தில் இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்து வீசும் வாய்ப்பு சேன் வோர்னுக்கு கிடைக்காது. அனேகமாகப் பின்வரிசை வீரர்களுக்குத்தான் அவர் பந்துவீச முடியும்.

இந்திய அணியின் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களை பொறுத்த வரை மூன்று ஆண்டுகளுக்கு முன் இருந்த அதே வீரர்கள்தான் சேவாக்கிற்கு ஒரே ஒரு முறை பந்து வீசியிருக்கிறேன். அதுவும் உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் அவர் அதிரடி வீரர். அவர்போன்ற வீரர்களை வீழ்த்துவது சுலபம். ஆகாஸ் சோப்ரா எப்படி விளையாடுவார் என்று கேள்விப்பட்டது கூட இல்லை. நல்ல வேளை தொலைக்காட்சி இருக்கிறது. பழைய போட்டிகளைப் பார்த்து இவர்கள் ஆட்ட முறைகளைக் கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிறேன்.

இது எங்களுக்கு முக்கியமான தொடர். அணியிலுள்ள ஒவ்வொருவரும் அதை நன்கு உணர்ந்திருக்கிறோம். முதல் நாளிலிருந்தே ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்வோம். முதல்நாள் ஆட்டம் எப்படியிருக்கிறதோ அதுதான் இந்தத் தொடரின் எஞ்சிய பகுதியைத் தீர்மானிக்கும் என்று நம்புகிறேன். அருமையான போட்டியாக இருப்பதால் மழை தொந்தரவு தராது என்றே நம்புகிறேன் என்றார்.

## சிந்தனைக்கு



சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## அரியசந்தர்ப்பம்

இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்று காண்பதற்கு, இன்று காணப்படுவது போன்றதொரு சாதகமான அரசியல் சூழ்நிலை எந்தவொரு ஆளும் கட்சிக்கு எப்பொழுதுமே கிடைத்ததில்லை. அதாவது அரசியல் தீர்விற்கு முரண்பட்டு நிற்கக்கூடியதான எதிர்க்கட்சியும், அரசியல் உரிமைகளைக் கோரி நிற்கும் தமிழர் தரப்பும் ஒன்று சேரச் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இது ஒரு முரண் போன்றதாக உள்ளதென கூறினும் மிகையாகாது. ஏனெனில் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆளும் கட்சி (எதுவாகயிருப்பினும்) சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் போது எதிர்க்கட்சிகள் அவற்றை எதிர்ப்பது வழமையானதாகும்.இவ் எதிர்ப்பானது சாத்வீகமாக ஆரம்பித்து வன்முறையில் முடிவுறுவதே வரலாறாக இருந்து வந்துள்ளது. இதன்காரணமாக ஆளும் தரப்பு தமிழர் தரப்புடன் இணக்கம் கண்ட விடயங்களைக் கூட அமுல்படுத்தமுடியாததொரு நிலையே உருவாகி வந்தது. ஆனால் தற்போதைய சூழ்நிலை அவ்வாறானதாக இல்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளதோடு அரசாங்கம் பேசத் தயங்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி வருகின்றது. ஒருவகையில் பார்த்தால் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு மேலாகவே எதிர்க்கட்சியின் நிலைப்பாடு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு உள்ளது எனவும் கூறலாம்.

இதனை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இலங்கை வரலாற்றில் இத்தகையதொரு அரிய சந்தர்ப்பம் முன்னர் எப்பொழுதும் கிடைக்கவில்லையென அவர் தெரிவிக்கின்றார். இது முற்றிலும் உண்மையானதே. ஆனால் தற்பொழுது வரலாற்று முரணாக எழுந்திருப்பது ஆளும் கட்சி கடந்த காலத்தில் எதிர்க்கட்சி வகித்த பாத்திரம் போன்ற நிலைப்பாட்டை வகிக்க முனைவதே.

இதனை முன்னாள் அமைச்சரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் பீரிஸ்அவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அவர் கூறுகின்றார் இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக உள்ளது எதிர்க்கட்சிகளல்ல ஆளும் கட்சியே. அதனுள் காணப்படும் முரண்பாடே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்குத் தடையாகவுள்ளன என்கிறார்.

ஆளும் கூட்டணிக்குள்இனப்பிரச்சினை தொடர்பாக இணக்கப்பாடானதொரு நிலைப்பாடு இல்லை. அத்தோடு பௌத்த–சிங்கள பேரினவாத சக்திகளின் ஆதரவில் தங்கி நிற்கவும் அரசாங்கம் முற்பட்டுள்ளது. இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கானதொரு நிலையில் அது இல்லையென்றே கூறலாம். விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் குறிப்பிட்டுள்ளது போன்று பேச்சளவில் சமாதானப் பேச்சுக்களை முனனெடுக்க வேண்டும் என்கின்ற அறிக்கைகள் வெளியிடப்படுகின்றனவே தவிர பேச்சுவார்த்தை மேசைக்குவருவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சனாதிபதியின் தரப்பில் இருந்தோ அல்லது அரசாங்கத்தரப்பிலிருந்தோ முன்னெடுக்கப்படுவதில்லை என்பதே யதார்த்தமாகும்.

இந்நிலையில் சனாதிபதி கூட்டியுள்ள நல்லிணக்க ஆலோசனைச் சபையானது இனப்பிரச்சினை தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் இணக்கப்பாடொன்றிற்கு வருவதற்கானதல்ல ஆளும் கட்சிக்குள் காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்கப்பாடு ஒன்றை காண்பிப்பதற்கானதென்றே கூறுதல் பொருத்தப்பாடானதாகவிருக்கும்.

ஆனால் இச் சமாதான ஆலோசனைக்குழு இனப்பிரச்சினை தொடர்பான இணக்கப்பாடானதொரு முடிவிற்கு வருமென எதிர்பார்பதற்கில்லை. ஏனெனில் அதிகாரப் பரவலாக்கல் என்ற ரீதியில் இக் கூட்டணிக்குள் பாரியவேறுபாடு உள்ளது. இவர்களில் அதிகாரப் பரவலாக்கல் என்பதே தேவையற்றது என வாதிடுபவர்களும் உள்ளனர்.ஆகையினால் வரலாற்றில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கிடைத்துள்ள அரியதொரு சந்தர்ப்பத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பயன்படுத்திக் கொள்ளாது இழுத்தடித்துச் செல்ல முனைகின்றாரென்றே கூறலாம். தமது ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள அவர் மேற்கொள்ளும் இந் நடவடிக்கையானது பெரும் வரலாற்றுத் தவறாகவே இருக்கும். ஏனெனில் இதன் விளைவு எதிர்காலத்தில் சிறிலங்காவிற்குச் சாதகமானதாக இருக்கப்போவதில்லை.

### உலக ஆசிரியர் நாள்–2004

# தமிழ் மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வு, வலய மட்டத்தில் பரிசுபெறுவோர் விபரம்

**வலயம் மட்டக்களப்பு**
திரு.செ.சிவானந்த தேவன் 01
மட்/புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம்
திருமதி.தி.ஹரிதாஸ் 01
மட்/சிவானந்த வித்தியாலயம்
திருமதி.சு.பூபாலசிங்கம் 03
மட்/கிரான்குளம் விநாயகர் ம.வி.

**வலயம் பட்டிருப்பு**
திரு.மு.தயாநிதி 01
மட்/முதலைக்குடா ம.வி.
திரு.தா.கோபாலகிருஷ்ணன் 01
மட்/குருமண்வெளி சிவசக்தி ம.வி.
திரு.க.பிரபாகரன் 01
மட்/திருப்பழுகாமம் கண்டுமணி ம.வி

**வலயம் கல்குடா**
திரு.ஜனாப் எம்.ஏம்.எச்.இஸ்மால் 01
மட்/அந்தூர் ம.வி.
திரு.முத்துராமன் சுந்தரம் 02
மட்/கிரான் ம.வி.
திரு.எல்.ரீ.எம்.சாதிக்கீன் 02
மட்/அந்தூர் ம.வி

**வலயம் அக்கரைப்பற்று**
திருமதி இ.சதானந்தம் 01
அக்/கலைமகள் வித்தியாலயம்
திரு.து.யோகநாதன் 02
அக்/இராமகிருஷ்ணமிசன் வித்தியாலயம்
திருமதி.மு.ஜெயானந்தமூர்த்தி 03
அக்/தம்பிலுவில் ம.ம.வி.

**வலயம் கல்முனை**
செல்வி. சதாசிவம் சோதீஸ்வரி 01
கல்/இராமகிருஷ்ணசபை பெண்கள்.க.

**வலயம் சம்மாந்துறை**
திரு.பிள்ளையான்தம்பி யோகராசா 01
ச.து/ராணமடு இந்து ம.வி.
கண்ணப்பன் கிருபாலட்சுமி 02
ச.து/ ராணமடு இந்து ம.வி

**வலயம் திருகோணமலை**
திருமதி.ஜெயதாசன் மதிவதனி 01
திரு/பாரதி தமிழ் வித்தியாலயம்
திருமதி ஏ.வீ.ஏ.கிருபாகரன் 02
திரு/புனித மேரிக்கல்லூரி
திருமதி.ஞா.தனபாலசிங்கம் 02
திரு/புதுக்குடியிருப்பு அ.த.க.பள்ளி

**வலயம் மூதூர்**
திரு.மு.மோகனேந்திரன் 01
தி/ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயம்
திரு.றெ.சதாத் 02
தி/வான் எல புகாரி வித்தியாலயம்
திரு.ஏ.சீ.தௌபீக் 03
தி/கிண்ணியா மத்தியகல்லூரி

**வலயம் வவுனியா தெற்கு**
திரு.அ.றகுமத்துல்லா 01
வ/மதீனா வித்தியாலயம்
திருமதி.நெ.அன்ரனிகுரூஸ் 02
வ/செட்டிக்குளம் ம.வி
அ.சுஜீவா 03
வ/வவுனியா தமிழ் மத்திய ம.வி

**வலயம் வவுனியா வடக்கு**
திருமதி.இ.தெய்வேந்திரன்
வ/புதுக்குளம் ம.வி

**வலயம் மன்னார்**
திருமதி.ப.பி.றெஜினா சந்தியோகுலோகு 01
மன்/புனித பாத்திமா ம.ம.வி
திருமதி.ஜெ.யூ.யூட்மிராண்டா 02
மன்.புனித பாத்திமா ம.ம.வி
திருமதி.ஆர்.ராமதாஸ் 03
மன்/புனித லூசியா ம.வி.

**வலயம் மடு**
செல்வி.சகாயம்மா ஞானப்பிரகாசம் 01
மன்/அடம்பன் ம.ம.வி
செல்வி.கிஹவின்றோஸ் கிறிஸ்தோப்பர் 02
மன்/தேவன்பிட்டி றோ.க.த.பள்ளி

**வலயம் முல்லைத்தீவு**
செல்வி.த.மேரிசுசி 01
மு/முல்லைத்தீவு ம.வி
திரு.சி.ஜெயகாந்த் 02
மு/பாரதி வித்தியாலயம்
திருமதி.அ.விமலதாஸ் 02
மு/கொக்கிளாய் அ.த.க.பள்ளி

**வலயம் துணுக்காய்**
திரு.க.முருகேசு 01
மு/வவுனிக்குளம் படிவம் 4
திருமதி.ஜெ.தவநேசன் 02
மு/மல்லாவி மத்திய கல்லூரி

**வலயம் கிளிநொச்சி**
திருமதி செ.இராஜரட்ணம்01
கிளி/தருமபுரம் ம.வி.
திரு.கணபதிப்பிள்ளை குணரத்தினம் 02
கிளி/வேரவில் இந்து ம.வி.
செல்வி.கைலாயப்பிள்ளை ரஞ்சிதமலர் 03
கிளி/மாசார் அ.த.க.பள்ளி

**வலயம் யாழ்ப்பாணம்**
திருமதி.சத்தியவாணி செபமாலைதாசன் 01
யா/பெரியபுலம் ம.வி.
திரு.சி.தங்கரூபன் 02
யா/புனித பத்திரிசியார் கல்லூரி
திரு.ஜோசப்ஜோன்சன் ராஜ்குமார் 03
யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்

**வலயம் வலிகாமம்**
திரு.சு.சிறீகுமரன் 01
யா/ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்
செல்வி.பூ.ஜெயமலர் 02
யா/விக்ரோறியாக் கல்லூரி
திரு.தயானந்தன் 02
யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.

**வலயம் தீவகம்**
திருமதி.க.விஜிதா 01
யா/கரம்பொன் சிறியபுஸ்பம் மகளிர் ம.வி

**வலயம் தென்மராட்சி**
திருமதி.மாலினிதேவி முத்துலிங்கம் 01
யா/மிருசுவில் அ.த.க
திருமதி.தேவராணி நாகராசா 01
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பள்ளி
திருமதி.மஞ்சுளாதேவி மகேசன் 03
யா/வீரசிங்கம் ம.வி.மீசாலை

**வலயம் வடமராட்சி**
திரு.நடராசா தேவராசா 01
யா/உடுத்துறை ம.வி.

**வலயம் கண்டி**
திருமதி.குமுதினி.இரவீந்திரன் 01
க/தலாத்து ஓயாதமிழ் ம.வி.
திருமதி.ச.அருணாசலம் 01
க/விவேகானந்தா தமிழ் ம.வி
திருமதி.சு.சிவமூர்த்தி 03
க/விவேகானந்தா தமிழ் ம.வி.

**வலயம் நாவுல**
திரு.வை.சரவணமுத்து 01
நா/கம்மடுவ தமிழ் வித்தியாலயம்
திரு.நல்லையா பிரேமகுமார் 01
நா/கம்மடுவ தமிழ் வித்தியாலயம்

**வலயம் நுவரெலியா**
செல்வி.சு.யோகராணியம்மாள் 01
நு/டெஸ்போட் த.வி.நானுஓயா
திருமதி.சு.திருவனம் 02
நு/டெஸ்போட் த.வி.நானுஓயா
திரு.ம.உதயகுமார் 03
நு/பேர்ஹாம் த.வி.தலவாக்கல

**வலயம் கம்பளை**
திருமதி.ரி.சந்திரவதனி 01
க/கதிரேசன் மத்திய கல்லூரி
திரு.பி.குணசேகரன் 02
க/விக்டன் தமிழ் வித்தியாலயம்
செல்வி.கந்தையா கீதாஞ்சலி 03
க/முத்துமாரியம்மன் தமிழ் வித்தியாலயம்

**வலயம் கொத்மலை**
திரு.துரைசாமி நடராசா 01
கொ.றஸ்புருக் தமிழ் வித்தியாலயம்
திருமதி.Z.B.ஸக்கிரியா 01
கொ/அல்அரபா முஸ்லிம் வித்தியாலயம்
செல்வி P.சுசிலா 03
கொ/சீன்வித்தியாலயம்

**வலயம் ஹற்றன்**
திரு.பி.சங்கர் 01
அவ/எல்டொப்ஸ் தமிழ் வித்தியாலயம்
மு.அகிலன் 02
அவ/புளியாவத்த த.ம.வி.டிக்கோயா
திருமதி.எஸ்.தியாகராஜா 02
அவ/ஹைலன்ஸ் கல்லூரி

**வலயம் காலி**
V.L.M.M.KHAIRA 01
கா/மழ்ஹறுல்ஸுல்ஹியா தே.பள்ளி
M.H.F.நுஸ்கியா 02
கா/உஸ்வதுன் ஹஸனா ம.வி.
S.C.N.நசீரா 03
கா/ஸாஹிரா தே.பள்ளி

**வலயம் மாத்தறை**
M.I.M.NAFLY 01
மாறை/தாருகல் உலூம் ம.வி

**வலயம் அக்குரஸ்ச**
M.S.பஸ்லிஸாலிற் 01
மாறை/அஸ்ஸபாகனிஷ்ட வித்தியாலயம்

**வலயம் தங்காலை**
எம்.ஏ.எஸ்.ஸனூலா 01
ஹ/தங்காலை முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம்

**வலயம் அம்பாந்தோட்டை**
எஸ்.நஸீரா ஸக்கீம் 01
ஹ/ஸாஹிரா தேசியப்பள்ளி
M.M.M,பௌஸ்டீஸ் 02
ஹ/எம்.ஆர்.தாஸம் கனிஷ்ட வித்தியாலயம்

# சர்வதேச ஆசிரியர் நாளை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வு

சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் சிறப்பாக நடைபெற்றன. ஆசிரியர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டதுடன் பரிசளிப்புகள், பாராட்டுரைகள் என்பனவும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. முல்லை கல்வி வலயத்தில் மாலை 3.00 மணிக்கு முல்லைத்தீவு ஆசிரியர் தின நிகழ்வு நடைபெற்றன.

மின்சார நிலையத்திற்கு முன்பாக இருந்து ஆசிரியர் முதன்மை விருந்தினர்கள் மங்கள வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு மு/மகா வித்தியாலயத்தை வந்தடைந்தனர். கல்விப் பணிப்பாளர் திருமதி மு.முனீஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன் போது ஆண் ஆசிரியர்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியும், பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் பெண்களுக்கான மெதுவாக ஈருருளி ஓட்டமும், ஆண்களுக்கான மெதுவான உந்துருளி ஓட்டமும் நடைபெற்றது. மாலை 5.30 மணிக்கு அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

கிளிநொச்சியில் கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆசிரியர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. நேற்றுக்காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூசை நிகழ்வுகள் இடம்பெற்று ஆலய வாசல் முன்றலிலிருந்து அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப்பணிப்பாளர், பிரதி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும் மாலை அணிவிக்கப்பெற்று மங்கள இசையுடன் பிரதான வீதியூடாக ஊர்வலமாக அழைத்துவரப் பெற்று கிளிநொச்சி சென்திரேசா ஆலயத்தில் விசேட வழிபாடு இடம்பெற்றது. வழிபாட்டினைத் தொடர்ந்து அனைவரும் அங்கிருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பெற்று கிளி.மகாவித்தியாலயத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றது. ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு கிளி.மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் நடாத்தப்பெற்ற எழுத்தாக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்றோர்க்கு பணப்பரிசும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பெற்றனர். கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் கிளி.மாவட்ட 156 முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் இருந்து மங்கள இசையுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கிளி. பண்பாட்டு மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றது.

கிளிமாவட்ட தபுகக இணைப்பாளர் ராஜன் தலைமையில் 156 முன்பள்ளிகளைச் சார்ந்த 244 முன்பள்ளி ஆசிரியர்களின் கௌரவிப்பு பரிசில் நிகழ்வு இடம்பெற்றுள்ளதுடன், கலை நிகழ்வுகளும் செய்தித்தொகுப்பு வெளியீடும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,20)

## அரசியற்....

பிரதேச செயலகத்தில் மட்டு அம்பாறை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காப் பாதுகாப்புப் படைத்தரப்பினருக்குமிடையில் மட்டக்களப்புப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் அனுசரணையுடன் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் மட்டு. அம்பாறை மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பா.தயாமோகன் தலைமையில் தலைமைச்செயலகச் செயலாளர் மாசல் அவர்களும் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் த.குயிலின்பன் அவர்களும் மட்டு அம்பாறை மாவட்ட செயலக அரசியல் துறைப்பொறுப்பாளர் மனோஜ் அவர்களும் பங்குபற்றினர்.

சிறிலங்காப் பாதுகாப்புப் படைத்தரப்பில் கேணல் அமரதுங்க அவர்கள் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ்சமர திவாகர அவர்களும், உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் கீரகல அவர்களும் விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் கரணரட்ண அவர்களும் அவரது உதவியாளரும் பங்குபற்றினர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பதில் கடமை அதிகாரி றோஹொல்ம் அவர்கள் தலைமையில் கண்காணிப்பாளர் டீன் ஜோர்ஜென்சன் அவர்களும் அம்பாறை மாவட்டப் பதில் கடமை அதிகாரி ஜென்ஸ் வாங் அவர்களும், கண்காணிக்குழு இணைப்புச் செயலாளர் சதாசிவம் அவர்களும், உவைஸ் அவர்களும், பங்குபற்றினர். மட்டு அம்பாறை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் பா.தயாமோகன் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் இது நட்பு ரீதியான வழமையான சந்திப்பாகும் என்றும் சென்ற மாதச் சந்திப்பில் தாம் கலந்துரையாடும் போது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பல. இடையூறுகளைச் சந்தித்தோம் என்று சிறிலங்காப் பாதுகாப்புப் படைத்தரப்பினரிடம் கூறியிருந்தோம். அச்சந்திப்பின் பின் ஒரு சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இச் சந்திப்பின் போதும் சிறிலங்காப் பாதுகாப்புப் படையினரால் ஒரு சில இடையூறுகள் மேற்கொள்ளப் படுகின்றன என நாம் எடுத்துரைத்தோம். அதை அவர்கள் தங்களது கவனத்திற் எடுத்துக்கொள்வார்கள் என உறுதியளித்தனர்.

பாதுகாப்புப் படைத்தரப்பினர் இவற்றை நிவர்த்தி பண்ணி புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இசைவாக ஒத்துழைத்துச் செயற்பட்டால் எமது மாவட்டங்களில் நிரந்தர சமாதானம் ஏற்பட வழிவகுக்கும் எனத்தெரிவித்தார்.


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



2ஆம் லெப்ரினன்ட்
குமாரி
தனபாலன்
றோகினி
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

மண்ணின் மடியில் 28.02.1976
மண்ணில் வித்தாக 07.10.1997

உறவாலே இணைந்து நின்ற
உயிரான எம் குமாரியே - உனை
மறவாது தமிழீழம்
மறுபடி பிறப்பெடுப்பாய்.

07.10.1997 அன்று இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(5156)


## தமிழீழ...

களையும் அதன் பரினாம வளர்ச்சியினையும் போர்க்களத்தில் பெண்களின் தீரச் செயல்களை சித்திரிப்பதாக அமைந்துள்ளது.

இக்கண்காட்சியினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் அவர்களும் மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி பொன்.தியாகம் அவர்களும் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல் விதுசா அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து 2 ஆம் லெப் மாலதியின் திருவுருவப்படத்திற்கு இரத்தினேஸ்வர குருக்கள் ஈகச்சுடரை ஏற்றிவைக்க, மாலதியின் தந்தையாரான பேதுருப் பிள்ளை அவர்கள் மலர் மாலையினை அணிவித்தார். தொடர்ந்து ஆயுதக் கண்காட்சி மையம் திறந்து வைக்கப்பட்டது. மாலை நிகழ்வுகளிற்கு யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி தலைமை தாங்கினார்.முதல் நிகழ் வாக செஞ்சோலை மாணவர்களது வாழ்த்துநடனம் நடைபெற்றன. பின்னர் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் மனோண்மணி சண்முகதாஸ் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது. அடுத்து வவுனியா இறம்பைக்குள மகளிர் மகாவித்தியாலய மாணவிகளது சூரியன் நிலவாக என்ற சமூக நாடகம் சிறப்புற நடைபெற்றது.

அடுத்து சிறப்புரையினை அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் கணேஸ் நிகழ்த்தினார் தொடர்ந்து கலைபண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினது கண்ணதாசனின் நெறியாழ்கையில் உருவான மனவிலங்கு என்ற நாடகம் இடம்பெற்றது.

அடுத்து சோதியா படையணியினரதுசிறப்பு சண்டைக் காட்சியும்நடைபெற்று முதல் நாள் நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தது. (ச.தீ)

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

2ஆம் லெப்.மாலதியின் 17ஆவது ஆண்டு நினைவு நாளும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளான இரண்டாம் நாளான இன்றிரவு 7.30 மணிக்கு கலைநிகழ்வுகளும், சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

ஆரம்ப நிகழ்வாக குருகுலம் மாணவர்களின் மாவீரர் அஞ்சலி நடனமும், தேசியத்தலைவரை வாழ்த்தும் நடனமும் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து தலைமையுரையினை மன்னார் மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் நிலவரசி நிகழ்த்துவார். கலைநிகழ்வுகளாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் கவிதா நிகழ்வு, மாலதி படையணியின் நாடகம், சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் இசைக் குழு என்பனவும் நிகழ்வுகளுக்கிடையில் பல சிறப்புரைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா...

விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துவதையே தனது நோக்கமாக கொண்டு செயற்படுகின்றது. கருணா விவகாரமும் இதற்கு ஓர் உதாரணமாகும். இத்தகைய முயற்சிகளினால் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழர்களின் அரசியல் சக்தியையும் சிதறடிக்கும் முயற்சியில் அரசை வெற்றிபெற தமிழ் மக்கள் வாய்ப்பளிக்க மாட்டார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

## திருமலை...

ரான சதிவேலைகள் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறன. தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தை திணிப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை எதிர்ப்பது தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.விடுதலைப்புலிகள் கோரியுள்ள இடைக்கால தன்னாட்சி வரைவின் அடிப்படையில் உடனடியாக பேச்சுவார்த்தை தொடங்குமாறு வற்புறுத்தியும், திருமலையில் சட்டவிரோதமான முறையில் வேகமாகக் கட்டப்பட்டு வரும் பௌத்த விகாரைகள், சிங்களக்குடியேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சமாதானத்திற்கு எதிரான இனவாத சக்திகள் மற்றும் தேச விரோதிகளின் நடவடிக்கைகளையும், இனவாத அமைப்புக்கள் திருமலையை தனது வன்முறையின் மத்திய இடமாக மாற்றி உள்ளதனையும் கண்டித்தும்

அமெரிக்கா உட்பட சர்வதேச ஏகாதிபத்திய வாதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளை வற்புறுத்துவதை விடுத்து தென்னிலங்கை சிங்கள இனவாத அரசியல் சக்திகளுக்கே சமாதானம் பற்றிய அழுத்தம் கொடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியும், இலங்கை-இந்திய அரசின் கூட்டு சதியால் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வீரத் தளபதிகள் மாவீரர்களான 17 ஆவது ஆண்டு நினைவினை நெஞ்சில் நிறுத்தியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பூரண கதவடைப்பு செய்து ஒன்றுபட்ட எதிர்ப்பை வெளிக்காட்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம.

எவ்வித வன்முறையும் இன்றி அமைதி வழியில் குரல் கொடுப்போம். இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## புலிகள்...

மற்றொரு படகில் இருந்த தமிழக மீனவர்களிடம் சிறிலங்கா கடற்படையினர் கடிதம் ஒன்றையும் கையளித்தனர். அந்தக் கடிதத்தில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பின் எல்லைக்குள் வந்து மீன்பிடித்தால் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் என அதில் எச்சரித்திருந்ததாகவும், இந்திய அரசு இது குறித்து விடுதலைப்புலிகளை எச்சரிக்க வேண்டும் எனவும் மீனவர்களை விடுவிக்க ஆவண செய்யவேண்டுமெனவும் தமிழக முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதா தமது கடிதத்தில் இந்தியப் பிரதமரிடம் கேட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் தேவதாசிடம் பி.பி.ஸி. செய்தியாளர் தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய கடற்பிரிவு செயற்படுவதுதான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம் எனக் கூறி உள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. அப்படி ஒரு சம்பவத்தை பிரச்சினையை தமிழக மீனவர்கள் அங்கே சந்திக்கின்றனரா என வினா எழுப்பியபோது,

இல்லை, நிச்சயமாக நாங்கள் அப்படி எதனையும் சந்திக்கவில்லை. படகுகளை இழுத்துச் செல்ல வந்தவர்கள் இலங்கைக் கடற்படையினர் தான் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை எனக் கூறினார்.

## இராணுவம்...

ளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே மேற்கண்ட கருத்தினை அவர் வெளியிட்டார்.

யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னத்கோன் பிரதிநிதிகளிடையே மேலும் உரையாற்றுகையில் "படையினராகிய நாங்கள் குடாநாட்டு மக்களிடையே இயல்பு நிலையினை தோற்றுவிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். ஆயினும், சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினருக்கும் பொதுமக்களிற்குமிடையே சில கசப்பான நிகழ்வுகள் இடம்பெற்றுவிடுகின்றது. இது குறித்த இராணுவச் சிப்பாய்களினது அறியாமையினாலேயே இடம்பெறுகின்றது. இதை எவரும் பெரிதுபடுத்த வேண்டாம். இவ்வாறான அசம்பாவித்தனங்கள் எவையும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, தென்மராட்சியின் முன்னரங்க நிலையை அண்டியுள்ள கெற்பெலி, கிளாலி மற்றும் கச்சாய் பகுதிகளிலுள்ள தென்னந்தோட்டங்களை உரிமையாளர்களை பார்வையிட அனுமதிப்பது தொடர்பாக கடற்படையினருடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாகக் கூறப்படும் இச்சந்திப்பில் குறித்த பகுதிகளில் நிலைகொண்டுள்ள கடற்படை உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக நீடித்த இச்சந்திப்பின்போது உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள்ளும், அதை அண்டியதாகவுமுள்ள பாடசாலைகளை மீள இயக்குதல், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள் குடியமர்வு, விவசாய நடவடிக்கை என்பன பற்றி பெரிதும் ஆராயப்பட்டது. (27, 33)

## யாழ்...

தமிழ் சகோதரர்களுக்கும் எமக்குமிடையில் மனதில் கூட ஒரு இடைவெளி ஏற்படவில்லை. மாநாடு என்ற போர்வையில் மௌலி சுபியான் அவர்கள் இவ்வாறான இன ஒற்றுமைகளை சீரழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் இது போன்ற செயற்பாடுகளை இனிமேலாவது கைவிட்டு உருப்படியான வழிகளில் எங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு உண்மை, விசுவாசத்துடன் உழைத திடுங்கள் எங்கள் வேண்டுதலைப் புறக்கணித்து மாநாட்டினை நடத்த முற்படுமிடத்து, எங்கள் எதிர்ப்பினை நேரடியாகவே காட்ட நேரிடும் என்பதைத் தெரிவிப்பதோடு மாநாட்டையும் பகிஷ்கரிப்போம். (36, 27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.